# கடல் தேடும் நதி

(கவிதைத் தொகுதி)

கவித்தீபம் நுஸ்ரி ரஹ்மதுல்லாஹ்

வெளியீடு
தடாகம் கலை இலக்கிய வட்டம்
(இரண்டாம் வெளியீடு)

# கடல் தேடும் நதி

கவித்தீபம் நுஸ்ரி ரஹ்மதுல்லாஹ்

வெளியீடு
தடாகம் கலை இலக்கிய வட்டம்

# கடல் தேடும் நதி

கவித்தீபம் நுஸ்ரி ரஹ்மதுல்லாஹ்

வெளியீடு
தடாகம் கலை இலக்கிய வட்டம்

சமர்ப்பனம்

இப் பூமித்தாயில்
என் உடலில் உயிரூதி
என்னையும் வாழ
அனுமதித்த
படைத்தவனுக்கே
புகழனைத்தும்

கருவாக்கி
உருவாக்கி
ஆளாக்கி
தலை நிமிர வைத்த
தாய்க்கும், தந்தைக்கும்
இந் நூல்
சமர்ப்பனம்

## நூலின் பிரசவம்

| | | |
|---|---|---|
| பெயர் | : | கடல் தேடும் நதி |
| நூலாசிரியர் | : | கவித்தீபம் நுஸ்ரி ரஹ்மதுலல்லாஹ் |
| வெளியீடு | : | தடாகம் கலை இலக்கிய வட்டம் (இரண்டாம் வெளியீடு) |
| கணனி பதிப்பு | : | ஆசிரியர் |
| அட்டைப்படம் | : | அரபாத் |
| அச்சுப் பதிப்பு | : | சி.வி பப்லிஷர்ஸ் (பிரைவேட்) லிமிடட், கண்டி. |
| பதிப்புரிமை | : | நூலாசிரியருக்கே |
| பக்கங்கள் | : | *ivx+84* |
| வருடம் | : | *2015* நவம்பர் |
| பிரதிகள் | : | *500* |
| விலை | : | ரூபா. *250.00* |
| பதிவிலக்கம் | : | ***ISBN 978-955-42674-0-4*** |

9 789554 267404

## கடலைத் தேடுகிறேன்

வான் படைத்து மண் படைத்து எண்ணற்ற ஜீவன்களைப் படைத்து உலகாளும் படைத்தவனுக்கே புகழனைத்தும், என்னையும் கருவாக்கி உருவாக்கி ஆளாக்கிய தாய்க்கும் தந்தைக்கும் நன்றிகள் கோடி கோடியாகட்டும்,

அண்ணன் தம்பியாய், அக்கா தங்கையாய் இரத்த சொந்தம் தொட்டு முகநூல் வரையும் பாசத்தைப் பொழியும் அத்துனை பேருக்கும் என் பள்ளிக்கூட நண்பர்களுக்கும் என் இதயம் நிறைந்த நன்றிகள்.

"கடல் தேடும் நதி" தூண்டுதலாலும் பலரின் ஊண்றுதலாலும் இன்று உங்கள் கரம் தவழ்கிறது, ஒவ்வொருவருக்கும் ஒவ்வோர் திறமை இருக்கும் அவை தானாகவே வெளியாகிவிடுவதில்லை ஊக்கமும், வாழ்த்துக்களும் கிடைக்கப் பெறும் போது தான் அவை மெல்ல மெல்ல வெளியே மிதக்கத் தொடங்குகின்றன, அந்த வகையில் இந் நூலாக்கத்திற்கு ஊண்றுகோலாய் இருந்த, இருக்கின்ற, இருக்கப்போகின்ற அத்துனை சொந்தங்களுக்கும் என் நெஞ்சின் ஈரம் கலந்த நன்றிகள் உண்டாகட்டும்.

முன்னுரையை வழங்கிய திரு. அஷ்ரப் ஸிஹாப்தீன் அவர்களுக்கும் அணிந்துரையை வழங்கிய வைத்தியர் கலாபூஷனம் தாஸிம் அகமது அவர்களுக்கும் பதிப்புரையை வழங்கிய சகோதரி கலைமகள் ஹிதாயா ரிஸ்வி அவர்களுக்கும் மற்றும் என்னைப்பற்றி தானறிந்ததை சுவைபடத் தொகுத்த கவிதாயினி லூஸியா கூஞ்ஞே அவர்களுக்கும்,

நூலின் எழுத்துப் பிழைகளை சரி செய்து வழிகாட்டல்களையும் தந்த சகோதரி முனீரா அபூபக்கர் அவர்களுக்கும் , நண்பன் சர்ஜூன் நூர்தீன் அவர்களுக்கும் முகநூல் மூலமாக என்னைப் பற்றி வாழ்த்துக்களைப் பகிர்ந்துகொண்ட நட்புகளுக்கும் எண்ணற்ற நன்றிகள்.

நூலின் அட்டைப்படத்தை வடிவமைத்த அரபாத், பின்னட்டை வடிவமைத்த நண்பன் நிப்ராஸ், கவிதைக்கு ஏற்றவாறு படங்களை வரைந்து தந்த சகோதரி றைஸா மற்றும் சகோதரி பர்ஸானா

ஆகியோருக்கு எண்ணற்ற நன்றிகள் உரித்தாகட்டும்.

என் கவிதைகள் நூலாக்கப்பட வேண்டுமென்று பணத்தாலும் தங்கள் ஊழைப்பாலும் உதவிய சகோதரன் ஜீஸான், வைத்தியர் அரீம்ஸ், சகோதரன் சஜா, மற்றும் ஏனையோருக்கும் என் நன்றிகள்.

இவண்
கவித்தீபம் நுஸ்ரி ரஹ்மதுல்லாஹ்
*118/20 அல் ஹஸனாத் வீதி,*
*புத்தளம் - 61300, இலங்கை.*
*அலைபேசி - (+94)758262518*
*முகநூல் - facebook.com/poetnusry*
*இணையம் - poetnusry.blogspot.com*

## முன்னுரை

"நவீன தொழில் நுட்பங்களும் இணையமும் எதிர்காலத்தில்வாழ்வின் பெரும் பங்கை எடுத்துக் கொள்ளவிருக்கும் நிலையில் கவிதையின், இலக்கியத்தின் கதி என்னவாகும்" என்று ஒரு வினாவைப் பழுத்த இலக்கியவாதிகளிடம் பதினைந்து வருடங்களுக்கு முன்பு ஒரு நேர்காணலின் போது நான் முன்வைத்திருக்கிறேன்.

"மானுடம் வாழும் வரை இலக்கியத்திற்கு அழிவில்லை!" என்பதும் "நவீன தொழில் நுட்பங்களுக்கூடாக அது வளரும்" என்றும் "நவீன தொழில் நுட்பங்களை இலக்கியம் பயன்படுத்திக்கொள்ளும் என்றும் அவர்கள் பதில் தந்திருந்தார்கள்.

இதை இன்று கண்கூடாகக் கண்டுகொண்டிருக்கிறோம். இந்த நூலில் இடம் பெறும் அரைவாசிக்கும் மேற்பட்டவை இணையத்தில் வெளிவந்திருக்கின்றன. என்னதான் நவீனங்கள் வந்த போதும் மனித ஆத்மாவோடு பின்னிப் பிணைந்து போன இலக்கிய உணர்வு தானாகத் தோன்றித் தானாக வளர்ந்து கொண்டேயிருக்கிறது. மனிதனும் மொழிகளும் வாழும் வரை இலக்கியமும் அழியாதிருக்கும் என்பதை சிந்தனைபூர்வமாக உணர்ந்து வருகிறோம்.

இலக்கியம் அருகிவிட்டதா என்று எண்ண முற்படும் போது "இதோ எனது கவிதை நூல்" என்று ஓர் இளைஞனோ யுவதியோ முன்னால் வந்து நின்றுவிடுகிறார்கள் அவர்களில் ஒருவர் நுஸ்ரி ரஹ்மதுல்லாஹ்.

கவிதை இலக்கியத்தில் தோய்ந்த, அதில் தன் ஆத்மாவின் சுகத்தை அனுபவிக்கத் துடிக்கின்ற ஓர் இளவலின் எழுத்துக்கான பயணத்தின் ஆரம்பகாலப் படையல் இது. சொட்டுச்சொட்டாகக் கோலம் போடும் தினுசில் தனது எழுத்துக்களைத் தொகுத்து நமக்குத் தந்திருக்கிறார். ஒரு தலைப்பைத் தேர்ந்துகொள்ளும் நுஸ்ரி அதைக் கொண்டு கோலம் போட ஆரம்பிக்கிறார் என்று புரிந்துகொள்ள முடிகிறது.

பல்வேறு தலைப்புக்களிலான தனது படைப்புகளின் மூலம் வாழ்வின் தரிசனங்களை நம் கண் முன் கொண்டு வர நுஸ்ரி விழைகிறார். சொல்லத் தோன்றியவற்றை மென்மையான முறையில், வலிக்காத வார்த்தைகளில் எடுத்துவைக்கிறார். "நினைவின் சேமிப்பு", "பழஞ்சோறு" போன்ற படைப்புகள் சுவாரஸ்யமாகப் பேசுகின்றன. படிப்போரைச் சிறு பராயத்துக்கு இழுத்துச் செல்கின்றன.

"சிதறாத சோற்றுமணி
ஏமாற்றத்துடன்
சுவற்றில் காகம்"

"மழைக்குள் காகம்
சிறகுக்குள்
குயில் குஞ்சு"

போன்ற மின்னல்கள் வெறும் காட்சிப் படிமத்தை உருவாக்கி ரசிக்க விடுவது மட்டுமன்றி ஆழமான சிந்தனைக்கும் வழி கோலுகின்றன.

கவிதையானது வெகுஜனப்பட்டுப் பேசப்படுவதும் வெளியாகும் இடத்திலேயே சுருண்டு விடுவதும் கவிஞனின் மொழி ஆளுமையைப் பொறுத்தது. மொழி வாலாயம் கொண்ட கவிஞனின் தேர்ந்த சொற்களும் கவிதை வெளிப்பாட்டு முறையும் தாம் ஒரு பெரும் பங்கை வகிக்கின்றன. நுஸ்ரியினுடைய எழுத்துக்களில் மொழி வாலாயம் ததும்புகிறது. இளைய தலைமுறையில் ஒரு சிலருக்கே இது வாய்க்கிறது. ஆனால் சொற்களைத் தேர்வதில் நுஸ்ரி கவனம் செலுத்த வேண்டும்.

இந்தத் தொகுதியைப் படிக்கிற போது ஒரு கவிஞனுக்கே உரித்தான தார்மீக ஆவேசமும் பொதுவான நியாய ஓதலும் புரிந்துகொள்ளப்படுகின்ற அதே வேளை நுஸ்ரியின் இதயத்துடிப்பில்

கவிதை மீதான ஆர்வம் பிரளயித்துச் செல்வதையும் நான் அவதானிக்கிறேன். இது தான் முக்கியமான அம்சம். கவிதை மீதான தீராத காதல் கொண்ட ஒருவரால் தான் தொடர்ச்சியாகக் கவிதையில் ஈடுபடவும் நல்ல பல அம்சங்களைக் கவிதைளினூ வெளிக்கொண்டு வரவும் முடியுமாக இருக்கும்.

ஆனால் வாழ்வியல் சிக்கல்களுக்குள் அகப்பட்டுச் சிதறுவதன் மூலமும் தன்னை யாரும் கவனிக்கவில்லை என்று மனச்சோர்வு அடைவதன் மூலமும் கவிதையைக் கைவிட்டு விடாமல் தொடர்ச்சியாக இயங்குவதன் மூலமே நுஸ்ரி எதிர்காலத்தில் ஒரு அடையாளம் பெற்ற கவிஞராக மிளிர முடியும்.

நுஸ்ரியின் முயற்சிகள் மேம்பட எனது நல்வாழ்த்துக்கள்!

-அஷ்ரஃப் சிஹாப்தீன்
*31.10.2015*

**நுஸ்ரி ரஹ்மத்துல்லாஹ்வும் "கடல் தேடும் நதியும் "**

இன்று புத்தளத்து மண்ணிலே புத்தியோடு "கடல் தேடும் நதியாய்" நுஸ்ரி ரஹ்மத்துல்லாஹ் வருகின்றார்.

நான் அறிந்த நல்ல வளரும் கவிஞர் ~புதுக் கவிதை புனையும் வல்லபம் மிக்கவர் கவிதையென்னும் ஒளிப்படக்கருவி மூலம் தன்னிதயத்து உணர்ச்சிகளுக்கு வண்ணமான வடிவமைக்கும் கவிஞன்.

தேன்னென இனிக்கும் நல்ல தமிழோசை !சொல்லச் சொல்ல சுவைக்கும் சுந்தரத் தமிழாசை கொண்டிருக்கும் இந்த இளம் உள்ளத்திலே பூத்து மணக்கும் கவிப்பூக்களை யான் அடிக்கடி நுகர்ந்துள்ளேன் அந்தப் பூக்களை தடாகம் தாமரையாய் இன்று தருகின்றது.

தலை பிறழாத தண்டமிழிற் தரும் கவிதையாவும் அவ்வப் போழ்து சர்வதேச மட்டத்தில் இணையத் தளங்களிலும் ,முக நூல்களிலும் ,ஈழத் தமிழ் தினசரிகளிலும் ,வானொலிகளிலும் இடம் படித்தவை சுவை படைத்தவை தமிழ் கூறும் நல்லுலகுக்கு தடாகம் "கடல் தேடும் நதியை "தனது இரண்டாவது வெளியீடாக பிரசவித்து தருகின்றது .

சோகக் கொடி பறக்கும் சோதனைக் கோட்டையான மன்னார், சிலாவத்துறையில் பண்டார வெளி எனும் கிராமத்தை பூர்வீகமாகக் கொண்ட ரஹ்மதுல்லாஹ் ஜரீனா உம்மா தம்பதிகளின் புதல்வர் இந்த கவிஞர்.

1990 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளால் விரப்பட்டு இன்று புத்தளத்தில் வசிக்கிறார்கள் ஆனாலும் வேதனைகளுக்கு மத்தியிலும் சிந்தனைச் செடியிலே பூத்துக் குலுங்கும் பாப் புட்பங்களுக்கு குறைவே இல்லை.

தடாகம் கலை இலக்கவட்டம் -கல்வி, கலை, கலாச்சார பன்னாட்டு அமைப்பு சர்வதேச மட்டத்தில் மாதா மாதம் நாடாத்தும் கவிதைப்போட்டியில் இந்திய (பாவலர்கள் ) நடுவர்களால் தெரிவு செய்யப்பட்டு வெற்றி பெற்று .கவித்தீபம் பட்டத்தை தட்டிக்கொண்டார்.

இந்த கவியாத்மாவின் உள்ளத்தில் "கடல் தேடும் நதி" போல இன்னும் இன்னும் நறுந்தமிழ்ப் பாக்கள் பூக்கட்டும்

,

தமிழுக்கினிமை சேர்க்கட்டும் என இதயங்கனிந்து நிறைவோடு வாழ்த்துகின்றேன்

**கலைமகள் ஹிதாயா ரிஸ்வி**
அமைப்பாளர்
தடாகம் கலை இலக்கவட்டம்
கல்வி, கலை, கலாச்சார பன்னாட்டு அமைப்பு
இலங்கை

தொடர்புகளுக்கு-
*thadagamkalaiilakkiyavattam@gmail.com*

## கவிச் சிதறல்கள்


| | | |
|---|---|---|
| 01. | உயிர் முதல் | 01 |
| 02. | கோபக்காரர்கள் | 02 |
| 03. | காலாவதித் தேதி | 03 |
| 04. | கறுப்பி நீ | 04 |
| 05. | காதலர்கள் | 05 |
| 06. | முள்ளிவாய்க்கால் | 06 |
| 07. | பொறாமை | 07 |
| 08. | திரும்பி வாங்கப்பா | 08 |
| 09. | கவிஞர்கள் | 09 |
| 10. | வெவசாயி | 10 |
| 11. | அநீதிக் கொலை | 11 |
| 12. | தர்மம் | 12 |
| 13. | ஏழை வீட்டு விவகாரம் | 13 |
| 14. | கடைக்கண் பார்வை | 14 |
| 15. | ஊனம் | 15 |
| 16. | கண் தானம் | 16 |
| 17. | புன்னகை | 17 |
| 18. | பூக்கள் | 18 |
| 19. | பாலைவனக் கண்ணீர் | 19 |
| 20. | யாரிவர்கள் | 20 |
| 21. | நினைவின் சேமிப்பு | 21 |
| 22. | ஆசிரியப் பெருந்தகைகள் | 22 |
| 23. | தவம் | 23 |
| 24. | சீதனம் | 24 |
| 25. | இரட்டை | 25 |
| 26. | கிராமக் காதல் | 26 |
| 27. | தூரத்தில் ஓர் கண்ணீர்த் துளி | 27 |
| 28. | மீண்டும் மீண்டும் | 28 |
| 29. | என் நீ | 29 |
| 30. | கற்றுத் தா | 30 |
| 31. | உன் நினைவோடு | 31 |
| 32. | கடல் தேடும் நதி | 32 |
| 33. | பழஞ்சோறு | 33 |
| 34. | சின்னவளே | 34 |
| 35. | மௌனத்தின் சப்தம் | 35 |

| | |
|---|---|
| 36. பிஞ்சு மகள் | 36 |
| 37. அழகிய பெண்மணியே | 37 |
| 38. சித்திரம் பேசுதடி | 38 |
| 39. எனக்குப் பிடிக்கும் | 39 |
| 40. விழிச்சுக்க | 40 |
| 41. மேகமே | 41 |
| 42. தோல்வி | 42 |
| 43. சூதாட்ட விளையாட்டு | 43 |
| 44. காவியக் கைகள் | 44 |
| 45. பள்ளிப் பருவம் | 45 |
| 46. பாக்கெட் பேனை | 46 |
| 47. ஐஸ் பெட்டி | 47 |
| 48. மனையாள் | 48 |
| 49. தேடல் | 49 |
| 50. பெண் உழைப்பாளி | 50 |
| 51. தாயகம் | 51 |
| 52. என்ன காதலிது? | 52 |
| 53. பிரியாவிடை | 53 |
| 54. மனிதம் இன்னும் வாழ்கிறது | 54 |
| 55. முதுமை | 55 |
| 56. நான் | 56 |
| 57. பிரபலம் | 57 |
| 58. கவிக் குழந்தை | 58 |
| 59. நீ வேண்டும் | 59 |
| 60. வலி தாங்கி | 60 |
| 61. ஏய் பெண்ணே..!! | 61 |
| 62. பட்டது போதும் | 62 |
| 63. கவலை வேண்டாமே | 63 |
| 64. தட்டியது யாரோ! | 64 |
| 65. மீண்டும் வேண்டும் | 65 |
| 66. சின்னச் சிதறல்கள் | 66-80 |
| 67. என் கலைப் பயணப் பங்காளர்கள் | 81 |
| 68. முகநூல் நட்போடு | 82-84 |

உன்னை விட அதிகமாய்
எனக்காகவே துடித்த - உன்
இதயத்திற்கு என் வரிகளால்
ஒத்தடமிடுகிறேன் தாயே

நான் பிறக்கும் முன்பே
என் பாதமுன்னை
மிதிக்கையில்
புன்னகையோடு தடாவிய
உன் கைகள் மீது - என்
எழுத்துக்களால் ஓர்
முத்தம் வைக்கிறேன்

என் கண்கள் விழிக்க
உன் தூக்கம் தொலைத்தவளே
என் வயிறு நிறைய
உன் ஆசைகளை
மூட்டை கட்டியவளே
என் எழுத்துக்களால் உன்
வலி போக ஓர்
ஔடதம் செய்கிறேன்

தத்தித் தாவும் -என்
நடையை விட்டுவிட்டு
வீழ்ந்து விடக் கூடாதெனப்
பதறித் திரிந்த உன்
ஏக்கத்திற்கு என்
எழுத்துக்களால் ஓர்
அணைப்புத் தருகிறேன்

வெள்ளையனோ
கறுப்பனோ
நல்லவனோ
கெட்டவனோ
இது ஏதுமறியாமலே
பாலூட்டிய உன்
பாசத்தை என்
எழுத்துக்களால்
வரைகிறேன்

ஊர் சொல் விட்டுவிட்டு
உன் பிள்ளை நல்லவனென்று
நம்பிக்கை ஊட்டிய உன்
நம்பிக்கைக்கு -என்
எழுத்துக்களால் ஓர்
பாராட்டுதல் செய்கிறேன்

நான் யாராக இருந்த போதும்
என்னை இரசிக்கத் தெரிந்த
உனக்காக என் நூலின்
முதல் கவிதையை
சமர்ப்பிக்கிறேன்

என் நாவின்
முதல் வார்த்தையும்
என் எழுத்தின்
முதல் கவிதையும்
நீ தான் தாயே.

## 02. கோபக்காரர்கள்

பெற்ற தன் பிள்ளையைக்
கொஞ்சாமலும்
கெஞ்சாமலும்
மிஞ்சாமலும் கழியும்
நேரங்களை கண்ணீரால் கழுவும்
அப்பாக்களே!!

குடும்பச் சுமை
முதுகில் சுமந்து
தொழிற் சுமை
தலையில் சுமந்து
நிமிர முடியாமல் தவிக்கும்
உங்களில் பலருக்கு
வீடுகள் தந்த பட்டம்
பாசமில்லாதவர்கள் தான்

பிள்ளை நாளை நலம் வாழ
அவ்வப்போது கண்டிப்போடும்
சில போது தண்டிப்போடும்
காலம் கடத்தும் நீங்கள்
பல வீடுகளில் இன்னும்
கோபக்கரரெனும்
பட்டத்தின் சொந்தக்காரர்கள் தான்

குடும்பத்திற்காகவே
கடல் கடந்து
கரை கடந்து வாழும்
உங்கள் ஏக்கங்களையும்
தனிமையையும் - அந்தப்
பாலை நிலச் சூடுகள்
விழுங்கிக்கொண்டிருக்கின்றதெனும்
செய்தியறியாத அவர்கள் மனதில்
நீங்கள் இன்னும் கோபக்கார்கள் தான்

நீண்ட நேர உறக்கம்
அதிகாலைத் தேநீர்
ஆவி பறக்கக் கிடைக்கும்
திக் திக் நிமிடங்களின்
திகைப்பை விழுங்கி
ஓர் உயிரின்
ஊசலாட்டம் தொடர

அந்தத் தேநீரின் ஆவி
அடங்குவதற்குள்
அவன் ஆவி கூட
விண்ணை நோக்கிப்
பயணிக்கத்
தெடங்கியிருக்கலாம்.

நாளைய சந்திப்பின்
திட்டங்களைத் தீட்டி
நகரும் செக்கன்களை
கணக்கிட்டுக்கொண்டே
நடக்கும் அவைத் தலைவரின்
கால்கள் மேடையைத் தொட
முன்னமே நடை தளர்ந்து
மண்ணில் வீழ்ந்து கண் வழியே
அவர் ஆவி
பிடுங்கப்பட்டு விடலாம்.

கொல்லப்பட்டதாயும்
விபத்தில் சிக்கி ஒருவன்
உயிர் சிதைந்ததாயும்
நீண்ட நாள் சுகையீனம்
உடல் உருகி
உயிர் உறைந்ததாயும்
நாலு பேர் நாலு விதமாய்
சொல்லிக்கொண்டாலும்.

அவன் செய்த தீயது
அவனை பலி தீர்த்ததாயும்
காதல் தோல்வியென்று
தூக்கில் மாட்டி அவனுயிர்
விக்கி விக்கி வெளியேறியதாயும்
அங்குமிங்கும் கதை பரவினாலும்.
ஒன்றுமில்லை..

அவன் உடலில் குடிகெண்ட
உயிரின்
காலாவதித் தேதி
இன்று தானென்று - படைப்பாளன்
குறித்த தலை எழுத்து ஏனோ
பேசும் நாவுகளுக்கு
மறந்து போனது.

## 04. கறுப்பி நீ

என்ன நீ..
கரு விழியால்
காவியமெழுதுகிறாய்

கறுப்பை நேசித்து
இரவை தனித்து
இரசிக்க வைக்கிறாய்

கருங் கூந்தல் அதன்
பின்னலில் என்
மனதைப் பின்னி
அங்குமிங்கும்
ஊசலாட விடுகிறாய்

கறுப்பாய் நீயும்
கலராய் நானும்
காதல் செய்கிறோம்
கறுப்புக் கனவிலும்
கலர் கலராய்
ஆசை கொள்கிறோம்

கருவறை கறுப்பு
கல்லறை கறுப்பு
வெறும் தோலில் மட்டும்
பாகுபட்டுக் கிடக்கும்
மாந்தருள் நாமும் இனி ஓர்
பாடமாவோம்.

## 05. காதலர்கள்

தனக்காய் விட்டுவிட்டு
வேறொருவருக்காய்த் துடிக்கும்
இதயம் கொண்டவர்கள்

தன்னை தனக்குள் புதைத்து
இன்னொருவருக்குள் வளர்க்கும்
குணமுள்ளவர்கள்

காத்திருக்கும் நிமிடங்களை
நாட்களாயும்
சேர்ந்திருக்கும் நாட்களை
நிமிடங்களாயும் சிந்திக்கும்
பேராசைக்காரர்கள்

ஊரே எதிர்த்தாலும்
அவனுக்காக அவளையும்
அவளுக்காக அவனையும்
தைரியாமாய்த் தொலைக்கும்
இயந்திரங்கள்

கண்ணீரில் கவி வரையவும்
உதிரத்தில் வரலாறெழுதவும்
துணிந்த வீரர்கள் இவர்கள்

கூட்டத்தில் தனித்தும்
தனிமையில் கூட்டத்தையும்
தலைகீழாயுணரும்
வித்தைக்காரர்கள்

06. முள்ளிவாய்க்கால்

இரத்தத்தில் துவைந்த
தமிழீலர்களின்
காவியங்கள்
எழுதப்பட்ட இடம்

பலி தீர்ப்பதாய்
பாலகரை பாவமின்றி
சுட்டு வீழ்த்தி
விதைத்த இடம்

ஆடை கிழித்து
கற்பை வதைத்து
வீரப் பெண்களை
நசுக்கி விட்ட மண்

முள்ளிவாய்க்கால்...

புட்பூண்டுகளெல்லாம்
கம்பீரமாய் நிற்கிறது
வீர தியாகிகளிடம்
குடித்த இரத்தமின்னும்
நாடிகளில் ஓடிக்கொண்டிருக்கிறது

அவர்கள் கோழைகளல்ல
தன் இனம் காக்க
தன் நிலம் விட்டு வந்த தியாகிகள்

முள்ளிவாய்க்கால் சொல்லும்
அவர் வீரத்தை

## 07. பொறாமை

விலையின்றித் தொற்றியது
எட்டிப் பார்த்ததில் கிட்டியது
பொறாமை
அது நெஞ்சில் படரும்
நஞ்சாய்த் தொடரும் நோய்

கோடி கோடியாய்
கொட்டிக் கிடக்கட்டும்
எண்ணி அடுக்கி
பெட்டிகள் நிறைந்திருக்கட்டும்
அவனை விட அதிகமாய்
இன்னும் கொஞ்சம் வேண்டும்
எண்ணம் மட்டும் சுற்றும்

ஓய்வைத் தின்று
தூக்கம் விழுங்கி
உறவை மறந்து
உயிரைப் பறிக்கும்
பொறாமை;
தன்னை மட்டும் பார்க்கும்
சுயநலவாதிகளிடம் தாராளமாய்
குடிகொள்ளும்

வெளிச்சமுள்ள வீட்டின்
சுவற்றில் பட்டுத் தெரியும்
நிழலாய் இருந்து
வெளிச்சத்தையே விழுங்கும்
இருளாய் மாறும் பொறாமை
பொதுநல வாதிகளின் எதிரி.

## 08. திரும்பி வாங்கப்பா

அங்க ரெண்டு வருசம்
இங்க ரெண்டு மாசம்
தொலை பேசி பாசமும்
ஸ்கைப் முத்தமும் போதும்ப்பா
திரும்பி வந்துருங்க

புகைப்படம் பாத்து
கட்டியணைக்க முடியல
காணொளி பாத்து
கை பிடிச்சு நடக்க முடியல
எனக்காக வாங்கப்பா

காய் கறி வச்சாச்சும்
காலத்த ஓட்டிக்கலாம்
பட்டினியா கிடந்தாலும்
பக்கத்துல இருந்துக்கலாம்
திரும்பி வாங்கப்பா

கனவுல உங்கள
கண்டது போதும்
கூட இருந்தது போல
நெனப்பெல்லாம் போதும்
தொட்டுப் பேசி
கட்டியணைச்சு
பாசத்த பகிர்ந்துக்கலாம்
வாங்கப்பா

அழகான வீடிருக்கு
அமைதியான சூழலிருக்கு
ஒரு அறையில் ஒன்பது பேர்
எதுக்குப்பா கஷ்டப்படனும்
திரும்பி வாங்கப்பா

எனக்கெதுக்கு சீதனம்
சீதனமில்லா மாப்பிள்ளை
இல்லன்னா என்ன..
ஒத்தயாவே வாழ்ந்துக்குறேன்
நீங்க மட்டும் வாங்கப்பா

# 09. கவிஞர்கள்

மை கொண்டு வானும்
காரீயங் கொண்டு
மண்ணும் படைக்கும்
சித்திரக்காரர்கள்

வானில் நடக்கவும்
நிலத்தில் மிதக்கவும் தெரிந்த
ஏமாற்று வித்தைக்காரர்கள்

பொய்யை மெய்யாகச் சொல்லி
மெய்சிலிர்க்க வைக்கவும்
மெய்யை பொய்யாகச் சொல்லி
புரட்டியெடுக்கவும் தெரிந்த
பொல்லாதவர்கள்

விதையில்லா மரங்களும்
வேரில்லா செடிகளும்
எழுத்தில் நாட்டிக் காட்டும்
கில்லாடிகள்

காதல், கண்ணீர், பிரிவு, தனிமை
அதிகம் பிடிக்கும் இவர்களுக்கு

கவிஞர்கள்...!

எழுத்துக்களின் ராஜ்யத்தில்
இவர்கள் தான் என்றும்
ராஜாக்கள்

## 10. வெவசாயி

ஆண்டாண்டு மழ பாத்து
களி சேந்த நிலம் பாத்து
கத்த கத்தயா களி வெட்டி
களிக்குள்ள நீர் விட்டு
களி நீரு பாக்காம ஒழவடிச்சு
நல்ல வெதயா பாத்து வெதச்சு
கண் விழிச்சு பகலிரவா
காவக்காத்து

கண்ணிமை போல
பொத்திப் பொத்தி
வளத்தெடுத்து
பருவம் பாத்து
அறுவடை செஞ்செடுத்து

நெல் வேற வைக்கல்
வேற பிரிச்செடுத்து
மூட்டை மூட்டையா
கட்டியெடுத்து வண்டிலேத்தி
நல்ல மொதலாளி ஒருவருன்னு
தேடிப்பாத்து நல்ல வெலயாம்

ஊரு சொல்லக் கேட்டு
வித்து விட்ட பின்னால
பக்கத்து வீடு தொட்டு
ஊருத் தொங்கல் வரைக்கும்
வாங்கின கடனக் கொடுத்துவிட்டு

அடுத்த பருவ மழை பாத்து
காத்துக் கெடக்கான் வெவசாயி.

## 11. அநீதிக் கொலை

மிதமாய் விடிந்த காலை
மிதியாய் வந்து வீழுமென்று
யார் தான் எண்ணியிருப்பார்கள்
கடைசித் தருணம் வரையும்
குற்றவாளியை கண்டு பிடிக்கச்
சொன்ன
உத்தம புருஷனின் உயிர்
தொண்டைக் குழியில் இறுகி
விண்ணை நாடிச் செல்கிறது

யாக்கூப் மேனன்...
சரணடைந்த கூடுகளே
விழுங்கிக் கொண்ட அநியாயம்
தாடி வளர்ந்த முகத்தில்
முத்தமிட்டு உங்களை
வழியனுப்பி வைக்க
வேண்டுமென
ஆசையாயிருந்தது

சட்டப் புத்தகத்தில்
எலி கொரித்த பக்கங்கள்
நீதியை மறைத்துவிட்டு
அநீதியை தேடித் திரியும்
அக்கிரமக் கூட்டத்தில்
நீர் தெரியாமல் சிக்கிக்
கொண்டீர்

கவலை கொள்ளாதீர் நண்பா..
அநியாயமிழைத்தவரெல்லாம்
ஆடிக் களைக்கும் நாள் வரும்
அன்று அவர்கள் மானங்கள்
கம்பமேறி நா தள்ளி சாவர்
அதைப் பார்த்து நீங்கள்
பரிதவிக்கக் கூடாதென்று
இறைவன் உங்கள் உயிரை
வாங்கிக் கொள்ள கொஞ்சம்
அவசரப் பட்டான்

சுவனத்துப் பூஞ்சோலையில்
காலாற நடந்து திரியுங்கள்
குயில் பாட்டுக் கேட்டு
மனதை அமைதிப் படுத்துங்கள்
மீளுமிடம் அங்கே தான்.

## 12. தர்மம்

இருப்பது கொண்டு இல்லா
அவன் தேவை நிறைத்தல்;
தா எனக் கேற்க முன்
இதோ வெனக் கொடுத்தல்;
தர்மத்தின் உயர்
படிகளிலொன்று.

பெற்றதெல்லாம் நம்
முயற்சியில்லையுணர்தல்;
கொடுப்பதெல்லாம் நம்
இழப்புமில்லை புரிதல்;
தர்மத்தினொழுக்கத்தில்
முதல்.

பெட்டி பெட்டியாயிருந்தும்;
எண்ணி அடுக்கி பத்திரப்படுத்தியும்;
ஏழையவர் கண்ணீர் வடித்தனல்
உடைமைப் பணமொன்றும்
தூயதில்லை புரிந்து
தர்மத்தில் அவர் கண்ணீர்
துடைப்பது சிறப்பு

## 13. ஏழை வீட்டு விவகாரம்

குழாய் திறந்ததும்
நீர் வந்ததில்லை
ஆளியை நசுக்க
மின் வந்ததில்லை

ஏசிக் காற்றை
நுகர்ந்ததில்லை
இரண்டு நிமிடத்தில்
சமைத்ததில்லை

வாயாற வயிறார
உண்டதில்லை
கல் முள் குத்தாத
பாதங்களில்லை
சேற்றைப் பதம் பாராத
கால்களில்லை

இவர்களின்னும்
தடுப்பூசி கண்டதில்லை
தூங்காது விடிந்த
இராத்திரிகளில்லை
களவு போகுமெனப் பயந்ததில்லை

கிராமத்துப் புறாக்களிவர்கள்
சேலைத் தொட்டிலில்
சேதி சொல்லும் ஆசான்கள்
இவர்கள்
இயற்கையை நேசித்து
வாழத் தெரிந்தவர்கள்.

### 14. கடைக்கண் பார்வை

நடந்து கொண்டே மிதக்கிறேன்
தண்ணீரிலே நடக்கிறேன்
பெண்ணே எல்லாம்
உன்னாலே

தூக்கத்தை மட்டுமே
நுகர்ந்த என் தலையணை
இன்றெல்லாம் என்
கரு விழிகளைப் பார்க்கிறது
எல்லாம் பெண்ணே
உன்னாலே

வயிறு முட்ட உண்டவன்
உண்ணாமலே வயிறு நிறைகிறேன்
தாகிக்காது நீரருந்தியவன்
தாகித்தும் நீரருந்தத்
தாமதிக்கிறேன்
எல்லாம் உன்னாலே

வெயிலை வைதவன்
வெயிலிலே நனைகிறேன்
மழையை வைதவன்
மழையிலே காய்கிறேன்
பெண்ணே எல்லாம் உன்னாலே

கடந்து போன நொடியில்
நீ பார்த்த ஒற்றைப் பார்வையாலே

இலையில்லாச் செடிகள்
பூக்காமலிருப்பதில்லை
தடியில்லாமல் கொடிகள்
படராமலிருப்பதில்லை

கருங்கல் பாறைகள்
வெடிப்புற்று நீரூற்றுகள்
வழிந்தோடாமல்
இருப்பதில்லை

முடியாதென்று ஏதும்
முயற்சிப்பவனுக்கிருப்பதில்லை
முயற்சியுள்ளவன்
ஓய்வாயிருப்பதுமில்லை

காலிழந்தாலென்ன தன்
மானமிழக்கவில்லை
நரை விழுந்தாலென்ன
உயிரின்னும் விழவில்லை

கை காலிருந்தும்
கையேந்திப் பிழைக்கும்
கேவலங்களுக்கெல்லாம்
கோலூன்றியும் உழைப்பவர்கள்
படிக்கப்படா பாடப் பக்கங்கள்.

## 16. கண் தானம்

வெள்ளைப் பிரம்பில்
கண் பதித்து நடக்கின்ற அவனைப்
பார்த்து என் முகக் கண்களில்
கண்ணீர் நிரம்பிப் போகிறது

தட்டுத் தடுமாறி அவன்
நடப்பதை தினம் பார்த்து என்
நெஞ்சம் கொஞ்சம்
திக்கு முக்காடிப்போகிறது

பகலிலும் கறுப்புக் கனவாய் ஆனதே
அவன் வாழ்க்கை
அவன் வீட்டின் மேல் மட்டும்
சூரியன் கறுப்பாய் ஒளி வீசுகிறதே

என் உயிர்த் தொங்கல்களில்
என் கண் பிடுங்குங்கள்
அவன் முகக் குழிகளில்
மீள நாட்டி விடுங்கள்

நான் பார்த்த கலர்க் கனவை
அவனும் பார்க்கட்டும்
கொஞ்ச நாளாவது
அவன் வீட்டிலும்
சூரியன் செங்கதிர் வீசட்டும்.

## *17. புன்னகை*

காசு பணமுந் தேவல
பாடு பட்டு உழைக்கவுந் தேவல
ரெண்டிதழ் மட்டுங் கொஞ்சம்
அசைந்தாலே போதும்

புன்னகைக்க வரம் பெற்ற
மனிதன் நீயே புன்னகைக்க
மறந்து போனதேனடா??

வரமிருந்தால் மிருகங்கள்
புன்னகைக்கா நொடிகள்
இருக்குமோ சிந்தியடா??

புன்னகை கொண்டு அந்தப்
பெண்ணவள் மயக்கும்
விந்தை பாரடா
புன்னகையாலே காதல்
ஆக்ஸிஜன் பரிமாறுதடா

குழந்தையதன்
ஒரு துளிப் புன்னகை பற்றிட
தவியாய்த் தவிக்கும்
பெற்றவர்கள் பாரடா
அவர் தம் மனம் உன்னிலில்லை
ஏனடா??

மாலையே சாவதானாலும்
புன்னகைத்து மலரும்
பூக்கள் பாரடா அதனிடம்
பாடம் படித்திட தயக்கம்
ஏனடா??

## 18. பூக்கள்

இதழால் நிறமருந்தி
முற்றத்தில் பலர்
பார்வை அருந்தும்
பூக்களே..

சொல் கொண்டு நான்
வரையும் கவியுங்கள்
உயிர் நாடி நனைக்கட்டும்
உங்கள் இதயத்தை வருடட்டும்

முற்றத்து மல்லிகை மணப்பதில்லை
தானிருந்தும் உங்கள் மவுசுக்கு
குறைவில்லை
முள்ளுள்ள ரோஜாக்களை
பறிப்பதில் வலியிருந்தும்
தலையில் சூடாமல் யாரும்
இருப்பதில்லை

மணவீடு தொட்டு
பிண வீடு வரையும்
உங்கள் மனம் வீசாமல்
இருந்ததில்லை

மாலை வரை உங்கள்
உயிர் வாழும் காலமெனினும்
புன்னகைக்காமலுங்கள்
காலைகள் விடிந்ததில்லை

## 19. பாலைவனக் கண்ணீர்

ஓ பறவைகளே
ஓங்காரமெதற்கு
ஓடியாடிக் களைத்தவர்கள்
ஓரமாய் ஓய்வெடுக்கிறார்கள்
கொஞ்சம் அடக்கி வாசியுங்கள்.

ஏ பாலை வன மரங்களே
நிழல் தர ஏன் தயக்கமோ
நிம்மதி தேடிய சில ஜீவன்களுக்கு
நிமிட நிழலாவது கொடுங்களேன்

இவர்கள் காட்டுவாசிகளல்ல
சொந்த நாட்டின் நாயகர்கள்
இவர்கள் துறவிகளல்ல
சொந்த நாட்டின் மன்மதர்கள்

இவர்கள் கறுப்பாய்
கடுகடுத்தவர்களல்ல
சொந்த நாட்டின் பாசக்காரர்கள்
கொஞ்சம் பரந்து நிழல் கொடுங்கள்

தென்றலே மெல்லச் செல்லுங்கள்
இவர்கள்
பாலைவன புழுதி கொண்டு
தங்கள் வறுமைக் கறை மொழுக
வந்தவர்கள்

பஞ்சு மெத்தைகளில் படுத்துறங்கி
பசுமை வாழ்க்கை வாழ்ந்தவர்கள்
வறுமை தலை தூக்க
தலை தெறிக்க ஓடி வந்தவர்கள்.

## 20. யாரிவர்கள்

பட்ட மரத்தில்
பழம் பறிக்கிறார்கள்
பசுமை வயதை
சுட்டெரிக்கிறார்கள்

நெட்ட வளர விட்டு
ஒட்ட வெட்டப்
பார்க்கிறார்கள்
கும்மிருட்டில்
கூடிக் குலாவி
பிஞ்சான பின்னே
கை கழுவி விடுகிறார்கள்

இவர்களோ
வீதி விளக்கின்
சொற்ப நேரத்து
சிவப்பு வெளிச்சத்தில்
திரும்பிப் பார்க்கும்
முகங்களைத்
தேடித் திரிகிறார்கள்

பாவமிவர்கள் யாரோ
பெற்ற சுகத்தில்
சுமையாய்
வந்து வீழ்ந்தவர்கள்

பல ஆயிரம் பேருந்துகளேறி
குட்டி போட்ட பூனை போல்
சுற்றிச் சுற்றி வரும்
பாலகர்களிவர்கள்

ஒட்ட வெட்டா நகங்களும்
தேய்த்தும் போகா
கரி பூசிய முகங்களும்
தைக்க இடமில்லா
கிழிசலுடைகளும்
வேரோடிப் போன விரல்கள்
பட்டை கழறக் காத்திருக்கும்
மேனியும்
இதற்குமேல் அடையாளம்
சொல்லத் தெரியவில்லை.

## 21. நினைவின் சேமிப்பு

கோழி இறகின் நுணியில்
சிறு மயிர் வைத்து
காதைக் குடைந்ததுண்டா?

தேங்காய்த் தும்பெடுத்து
மூக்கைக் குடைந்து
தும்மல் எடுத்ததுண்டா?
அதன் சிறு சுகம்
அனுபவித்ததுண்டா?

சைக்கிள் மிதி பலகையில்
ஒரு காலை வைத்து
கெந்திக் கெந்தி சைக்கிள்
ஓட்டியதுண்டா?

நீச்சல்ப் போட்டி வைத்து
குளத்தின் மறுகரை
தொட்டதுண்டா?
மூச்சை அடக்கிப் பழகியதுண்டா?

வெறுஞ்சோற்றில்
தேங்காய்த் துருவலிட்டு
கறுவாடு சுட்டு
உண்டதுண்டா?
அதன் சுவை
உங்கள் நா தான் அறிந்ததுண்டா?

பழஞ்சோறு பிசைந்து
குறுமிளகாய், சிறு வெங்காயம்
அங்குமிங்கும் மிதக்க
காலை நேரம் உங்கள்
வயிறு நனைத்ததுண்டா?
அதன் குளுமை தானும்
அறிந்ததுண்டா?

தவறி வந்த ஆட்டை
மறித்துப் பிடித்து
சவாரி செய்ததுண்டா?
ஆட்டின் மடியில்
பால் கறந்து பார்த்ததுண்டா?

வகுப்பறைப்பாடம் முடிக்காமல்
ஒரு நாளாவது வகுப்பறையில்
அமர்ந்ததுண்டா?
கணக்கு வாத்தியாரைக் கண்டு
கை கால் உதறல் எடுத்ததுண்டா?

நடந்திருக்கும்.. உங்களுக்கும்
என் அனுபவம் புரிந்திருக்கும்
வேலைப் பளுவில்
இதையெல்லாம்
மீட்டிப் பார்க்க மறந்திருக்கும்

சேமித்த நல்ல நினைவுகள் தான்
ஒரு நாளில் உங்கள்
பேச்சுத் துணை ஆகப் போகிறது
அவ்வப்போது கொஞ்சம்
நினைவுகளை சேமிக்க
மறந்து விடாதீர்கள்.

## 22. ஆசிரியப் பெருந்தகைகள்

எங்கிருந்தோ வந்த மரங்கள்
எம் மரங்களோ தந்த விதைகள்
அத்தனையும் சரியாய்ப் பார்த்து
சமமாய் உரங்கொடுத்து
வளர்த்து விட்ட வற்றாத
நீரூற்று நீங்கள்

வைத்தியர் நீங்களில்லை
பொறியியலாளர் நீங்களில்லை
ஆனாலும் இவர் மனங்களில் எல்லாம்
நீங்கள் மட்டும் தான்

பெற்றெடுத்த பிள்ளைகளை விட
வளர்த்துவிட்ட பிள்ளைகள் தான்
உங்களுக்கு அதிகம்

நீங்கள் வாழ்வதற்காய்
கற்பிக்கவில்லை
ஆசிரியப் பெருந்தகைகளே
கற்பிப்பதற்காகவே
வாழ்கிறீர்கள்

## 23. தவம்

கள்ளப் பார்வை பார்க்கும்
உன்னிரு விழிகளில் தானடி
கள்ளங்கபடமில்லா என்
பிஞ்சு மனசு ஊஞ்சலாடப்
பார்க்கிறது

முத்து உதிர்ந்திடுமென நீ
பொத்திப் பொத்தி வைக்கும் உன்
வார்த்தைகளுக்காகத் தானடி
என்செவியிரண்டும் தவமிருக்குது

கனாக் காணும் உன் இரவுகளில்
விழி தூங்கா என் நினைவுகளை
உலாவ விடத்தானடி
கொள்ளைப் பிரியமெனக்கு

நான் தூங்கியும்
தூங்கா நினைவுகள்
உன்னிடம் தானடி
சுற்றிச் சுற்றி வருகுது

## 24. சீதனம்

கரும்பு தின்னக் கைக்கூலி
கேட்கும் தொழிலாளிகள்
ஆண் எனும் பட்டம் பூண்டு
பெண் போல் நடந்துகொள்ளும்
நடிகர்கள்

படித்த படிப்புக்கு
விலை கோரும் மகா
புத்திசாலிகள் இவர்கள்
படித்த பெண்ணும் வேண்டி
முடிச்சாய் பொன்னும் கேட்கும்
தந்திரகாரர்கள்

எனக்கு வேண்டாம் எல்லாம்
உங்கள் மகளுக்காகவென்று
நல்லதாய் நான்கு வார்த்தை பேசி
மொத்தமாய் சுருட்டிக்கொள்ளும்
கொள்ளைக்காரர்கள்

மாப்பிள்ளைக்கு சீதனம்
வேண்டாமாம்
நடந்து போக இயலாதாம்
மகிழூந்து வேண்டுமாம்

நிரந்தரமாய் தொழிலில்லையாம்
தொழில் வேண்டுமாம்
ஒன்றாய் வாழ வீடில்லையாம்
வீடு மட்டும் வேண்டுமாம்

ஆனால் சீதனம் வேண்டாமாம்
கேவலம்
கண்ணீர் வடிக்கும் குமரிகளின்
சாபக் கேடு சீதனம்

கண்ணீர் துடைக்கக் கேட்கும்
முதுகெலும்பில்லா
மாப்பிள்ளையின்
கூலிப்பணம்.

## 25. இரட்டை

அமர்ந்தால் எழச்சொல்வார்
எழுந்தால் அமரச் சொல்வார்
உன்னைப் போல் உலகுக்கு
நாக்கு ஒற்றையில்லை இரட்டை

தள்ளி விட்டுத் தூக்குவார்
தூக்கி விட்டுத் தள்ளுவார்
உன்னைப் போல் உலகுக்கு
மனம் ஒற்றையில்லை இரட்டை

உன் குறும்பைப் பார்த்து
நன்றாய் இரசிப்பார்
நீயில்லா வேளைகளில்
பைத்தியம் அவனென்பார்

உலகம் சொல்வதெல்லாம்
நீ செய்யவும்
நீ செய்வதையெல்லாம்
உலகம் விமர்சிக்கவும்
நீயொன்றும் உலகுக்காய்
வாழவில்லை

துணிந்து நட
தூற்றுவார் தூற்றட்டும்
தள்ளுவார் தள்ளட்டும்
உன்னை ஊண்டிவிட
உனக்கிரு கைகள் தந்தவன்
இன்னும் உன் கூடவே தான்
துணிந்தே நட

## 26. கிராமக் காதல்

பல்லு விழுந்த ஆச மச்சான்
முடி நரச்ச கறுப்பு மச்சான்
உடல் எழச்சுப் போன போதும்
ஒங்க பாசம் எழைக்கலீங்க
நடை தளர்ந்த போதும்
ஒங்க மனம் தளரலீங்க

பள்ளிக் கூடம் போகாமலேயே
காதல் பாடம் படிச்சீங்க
தினமொரு தடவ எனப் பாக்க
பெரிய திட்டமெல்லாம்
போட்டீங்க..

துருப் பிடிச்ச சைக்கிள்
கர கரக்குற சத்தம்
தைக்காமலே இருந்த
சாரத்துக் கிழிவுகளில்
என்னயும் சேத்து தச்சீங்க

அர கொறயா மழிச்சு விட்ட
மீசை தாடி எல்லாம்
காதலிக்கக் கங்கணம் கட்டுமுங்க
பாத்தும் பாக்காம நடிப்பீங்க
நாம் பாத்தா வெக்கப்பட்டு போவீங்க

படிச்ச பொண்ணு என்ன
பக்குவமா கவுத்துப்புட்டீங்க
ஆயுள் வரை ஒங்க
காதல் வேணுமுங்க என்
ஜீவன் உங்களுக்கு முன்னே
போயிடனுமுங்க

## 27. தூரத்தில் ஓர் கண்ணீர்த் துளி

செல்போன் முத்தம்
ஸ்கைப் புன்னகை
தொட்டுணர முடியா தூரத்தில்
ஓர் கண்ணீர்த் துளி

நெஞ்சில் அவளை சாய்க்கணும்
பிள்ளையை முத்தத்தில்
நனைக்கனும்
அப்பாவை கட்டியணைக்கனும்
அம்மாவின் மடி சாயனும்
கனவுகளோடு வாழ்கிறோம்

நாடிழந்து, வீடிழந்து
உறவிழந்து வந்து இங்கே
நிம்மதியிழந்து தவிக்கிறோம்
கண்ணீரை நாங்களே
துடைத்துக்கொள்கிறோம்

மத்திய கிழக்கு
பணம் கொடுப்பதாய்
எங்கள் கண்ணீரை
வாங்கிக்கொண்டது

அம்மாவிற்கு நெடுநாளாய்
சுகயீனம்
அப்பாவிற்கு தலைக்கு மேல் கடன்
தங்கையின் திருமணம் பல
தடவை
தடைப்பட்டுக் கிடக்கிறது
தம்பி விஞ்ஞானம் படிக்கனுமாம்
கொஞ்சம் கூடுதலாய் செலவாகும்
தினம் நினைத்து நினைத்தே
அழுது வடிக்கிறோம்

ஒழுங்காய்ப் படித்தாலும்
நாட்டில் வேலையில்லை
ஒழுங்காய் படிக்கவில்லை
வேலையே இல்லை எங்களுக்கு

கரை கடந்து வந்தோம்
கதியற்றுக் கிடக்கிறோம்
ஆபீஸ் வேலையென்று
கூட்டி வந்து விட்டு விட்டவர்கள்
ஆபிசை இன்னும் கண்ணிலும்
காட்டவில்லை

வருடம் இரண்டு கடக்கிறது
கண்ணீர் மட்டும் மீதப்படுகிறது
தூரத்தில் இருந்துகொண்டு
அழுகிறோம்
ஸ்கைப்பில் சிரிக்கிறோம்.

### 28. மீண்டும் மீண்டும்

என் பிஞ்சுப் பாதம்
கடற்கரையிலே தவழ..
என் தாயோடு
செல்லச் சண்டை செய்ய..
என் தாய் எனக்கு மட்டுமே என
கட்டியணைக்க..
மீண்டும் வேண்டும்
என் குழந்தைப் பருவம்..

ஓடியாடி விளையாடி மழையில்
நனைந்த போது ஏசி ஏசி என்னை
என் தாய் துடைக்க..
பரீட்சையில் சித்தியடைந்ததைச்
சொல்லி அப்பா கையால்
பரிசு வாங்க..
என் மழலை மொழி கேட்டு
என் உடன் பிறப்புகள் சிரிக்க..
மீண்டும் வேண்டும்
என் மழலைப் பருவம்..

சின்னப் பார்வை..
செல்லப் பேச்சு..
குட்டி நடை..
என என்னைத் தூக்கி என்
சொந்தங்கள் கொஞ்ச..

பாடசாலை போக மாட்டேன்
என அடம்பிடிக்க...
சின்னப் பொய் சொல்லி
என்னை பாடசாலைக்கு
கூட்டிச் செல்ல..

உப்பு மூட்டை ஏற்றி..
யானை மேல் சவாரி..
அடடடடா..
அனுபவித்த அவ்வின்பத்தை
பார்க்க மறந்து போனேன்..

இன்று என்மேல் குழந்தை என்
நினைவில் என் மழலை
ஞாபகங்கள்..

### 29. என் நீ

எனக்குள் மோதி
எனக்குள்ளேயே
துகளாகிறேன்

உன்னைத் தேடித் தேடியே
நான் தொலைந்து போகிறேன்

விட்டு விலகா என் நினைவில்
கரையாமலே உன் முகம்

கல்லாகிக் கொண்டிருக்கும்
என் மனதில்
சுவற்றோவியமாய் நீ

தூக்கத்தின் கனவு நீ
விடியலின் வெளிச்சமும் நீ

தலையணை தரும்
அணைப்பும் நீ

பைத்தியமா உனக்கென்று
கேட்டு நிற்கிறாய்

என் காதல் பைத்தியத்தின்
வைத்தியமே நீயெனப்
புரியாமல்.

## 30. கற்றுத் தா

எனக்கும் கற்றுத் தா
குழந்தையே...
அழுது முடித்த மறுகணமே
சிரித்திட உன்னால் முடிகிறதே
அதைக் கற்றுத் தா

நினைத்தது கிடைத்திடும் வரை
கண்ணீர் வடித்தாவது
போராட உன்னால் முடிகிறதே
அதைக் கற்றுத் தா

அழகு அசிங்கம் பார்த்திடாமல்
மனம் விட்டுப் பழகிட
உன்னால் முடிகிறதே
அதைக் கற்றுத் தா

கொஞ்சும் மொழியாலே
பிறர் மனம் புன்படாமல் பேசிட
உன்னால் முடிகிறதே
அதைக் கற்றுத் தா

சோம்பலின்றி
சொல்லும் வேலையை
சுறு சுறுப்பாய் செய்திட
உன்னால் முடிகிறதே
அதைக் கற்றுத் தா

செய்தது தப்பெனினும்
தைரியமாய் ஒத்துக்
கொள்ளத் தெரிகிறதே
அதை எனக்கும் கொஞ்சம்
கற்றுத் தா..

## 31. உன் நினைவோடு

ஆயிரம் தடவை உன்னிடம்
விடை பெறுகிறேன்
ஒரு எட்டு முன் நோக்கி
நகராமலே நிற்கிறேன்

கலைந்து போன உணர்வுகளை
ஒன்று சேர்த்து
மூட்டை கட்டி
கொட்டித் தீர்த்திட
வேண்டுமென எண்ணுகிறேன்

கண் பார்த்து பேச முடியாமல்
உன் வாய் பார்க்கிறேன்
உன் உதட்டின்
ஊசலில் தொலைந்தே போகிறேன்

எட்டித் தாவி
ஓடி விளையாடு
குரங்காய் என் மனம்
ஆனது..

நினைத்ததை முடிக்காமலே
நிமிடங்கள் கரைகிறது.
நிகழ்கால நினைவுகளை..
மூச்சு விடாமல் நீ பேசும் அழகை..
மூச்சுத் திணறிக் கேட்கிறேன்

என் இதயவறையில் இருக்கும்
உன் உருவம்
என் கண் முன்னே
தவழும் நிமிடங்கள் போதுமடி
எனக்கு..
காலம் முழுதும் என் துணையாய்

## 32. கடல் தேடும் நதி

கரை தொடும் அலை மீது
ஓர் நதி இன்று
நேசம் கொள்கிறது
தன் பிறப்பிடம் விட்டு
கடல் தேடி இன்று
பயணப்படுகிறது

காடு கரை தாண்டி
மேடு பள்ளம் தாண்டி
வீழ்ந்து எழுந்து
தன் பயணத்தைத் தொடர்கிறது
வலிபொறுத்து அதன்
இலக்கில் நகர்கிறது

பிறக்கும் போது யாராகவோ
வாழும் போது யாராகவோ
வாழ்ந்துவிட்ட அது - தன்
இலக்கின் பின்னராவது
இவன் தான் அவனென்று
பெயர் சொல்ல வேண்டி
தன் பாதையில் நகர்கிறது

அதன் முடிவு எதுவோ - அது
அறியவில்லை
முடிவு எது எனத் தெரியாத
வாழ்க்கை - அதற்குப்
பிடிக்கவில்லை

நதி - கடல் - தொடும்

### 33. பழஞ்சோறு

உப்பூத்தி பாலூத்தி
பழஞ்சோறும் பெனஞ்சு
குறுமொளகா ரெண்டு வச்சு
உப்புக் கருவாடு சுட்டு வச்சு
அம்மா நீ ஊட்டிவிட்ட
பழஞ்சோறு

தொண்டக்குழி நெறய
நாந்திண்டது இன்னும்
மூக்கு முட்ட மனக்குதம்மா
ஓட்டல் சாப்பாடு இப்பவெல்லாம்
வெறுக்குதம்மா

ஓடியாடி வெளயாடி
மழையில் நனஞ்சு வந்தவன
சொல்லால கண்டிச்சு - உன்
முந்தானையால துடச்சுவிட்ட

வெயிலும் மழையும்
எருமைக்கு மட்டுமில்லம்மா
இப்பவெல்லாம் எங்களுக்கும்
வித்தியாசம் தெரியல
கம்பனிக்காரன் தொல்ல
தாங்க முடியலம்மா

### 34. சின்னவளே

சின்னவளே புன் சிரிப்பில்
எனை கொய்தவளே
உறவுகள் தந்த முகங்களில்
மறவாதென நான் நினைக்கும்
முகங்களில் உன் ஒரு முகமும்
அடங்குமம்மா

பொன்னகைகள்
உனக்கழகென்பது
பெற்றவர்கள் நப்பாசை
அதை விட உன்னால்
அப் பொன்னகைகள்
அழகாகிறதென்று
சொல்லி விடம்மா

குட்டிச் சண்டை நீசெய்து
குறும்புகள் பல காட்டி
பெற்றவர் மனதை
குளிர வைப்பாய்
சொல் கேட்டு நடக்கையில்
உனைக் கண்டவர்கள்
பெருமிதங் கொள்ளட்டுமம்மா

வயது ஆனாலும் -உன்
புன்னகையும்,
காலம் கழிந்தாலும் -உன்
நற்குணமும்,
மாறிட வேண்டாமம்மா

சப்தமாய் ஓர் மௌனமும்
மௌனமாய் ஓர் சப்தமும்
என் காதுகளில் விழுகிறது
வாயிருந்தும் ஊமையாய்
காதிருந்தும் செவிடனாய்
நானாகிக் கொண்டிருக்கிறேன்

வயதறியாத வாலிபம்
கட்டுக்கடங்கா வீர ஓட்டம்
கால வேகத்தில் தன்னையறியா
இளைஞர் யுவதிகளின் இதயங்கள்
சப்தமிட்டே மௌனித்துப் போயின

விவாகரத்தின் விளிம்பில்
ஓர் ஜோடியின் வாழ்வு
சிற்றின்ப சுகம் தேடி
தலை தெறிக்க ஓடி வந்தவர்கள்
வாழத் தெரியா வாழ்க்கை
மௌனித்துப் போனது

கைக் கூலி கால்க் கூலி
ஏதும் வேண்டாம் வீடு போதும்
திருமணப் பேரம் பேசலில்
விலை போகாத பெண்ணின்
கண்களிரண்டும் அழுதழுதே
மௌமாய் சப்தமிடுகிறது

குடிகாரக் கணவன்
சொல்லுக்கடங்கா பிள்ளை
திக்கித் திணறியே வாழும்
அவள் வாழ்க்கை
சப்தமாய் மௌனிக்கிறது

கள்ளக் காதலன்
சந்தேக வாழ்க்கை
வெறுத்துப் போன கணவன்
இதயம் வெடித்தே
மௌனமாய் சப்தமிடுகிறது.

### 36. பிஞ்சு மகள்

கழற்றி வைத்த பாதணியைக்
காணவில்லை
தேடிக் கொண்டிருக்கிறேன்
பிஞ்சு மகள் ஒளிந்திருந்து
இரசித்துக் கொண்டிருக்கிறாள்
எனைக் கண்டதும்
ஒழிந்துகொள்கிறாள்

உலர்ந்த ஆடைகளையெல்லாம்
மனைவி மடித்துக்
கொண்டிருக்கிறாள்
ஆடை ஒவ்வொன்றாய்க்
குறைகிறது
கட்டிலுக்கடியில் சேர்கிறது

சுவற்று மேனி முணங்கிக்
கொள்கிறது
நிறங் கொண்டு மேனியெங்கும்
கிறுக்கல்கள்
கூச்சம் தாங்கவில்லை
சுவற்று மேனிகளுக்கு

இன்று ஓர் ரோஜா மொட்டு
நாளை அழகாய் பூத்துவிடும்
ஆவலாய் வந்து பார்க்கிறேன்
இதழிதழாய் சிதறிக் கிடக்கிறது
ஒவ்வொன்றாய் பொறுக்கி
குப்பையில் போட்டுவிட்டு
நகர்கிறேன்
தொலைபேசி சினுங்கிக்
கொண்டிருக்கிறது
தேடிப் புரட்டிக் கொண்டிருக்கிறேன்
அங்கம் அங்கமாய் கழற்றப்பட்டு
எச்சிலில்
குளிப்பாட்டப்பட்டிருக்கிறது
ரப்பர் பட்டிகொண்டு
செப்பனிட்டு வைக்கிறேன்

தட்டுத் தடுமாறி நடக்கத் தொடங்கும்
என் மகள் செய்யும் சேட்டைகள்
கோபத்தை விட முத்தங்களையே
அதிகமாய் பறிமாறச் செய்கின்றன

முத்தமொன்றை கொடுத்துவிட்டு
அவள் சிந்திய சோற்றுப் பருக்கை
மீது
நடந்து போகிறேன்.

## *37. அழகிய பெண்மணியே!!*

அழகிய
பெண்மணிகளே!!
கொஞ்சம் நில்லுங்கள் ..

பொன்னகையை
மறைத்து வையுங்கள்
புன்னகையை
பூத்து நில்லுங்கள்

மணத்தை
நிறுத்தி வையுங்கள்
மானத்தை
காத்து நில்லுங்கள்

கூந்தலை
மூடி வையுங்கள்
குரலை
தாழ்த்தி நில்லுங்கள்

அந்நியவரை
தூர வையுங்கள்
இறைவனை
பயந்திருங்கள்

பார்வையை
தாழ்த்திவிடுங்கள்
பாவத்தை விட்டும்
தூர நில்லுங்கள்

அழகிய சொற்களில்
உபசரியுங்கள்
ஆடம்பரத்தை நாளும்
தவிர்ந்து நில்லுங்கள்.

## 38. சித்திரம் பேசுதடி

வட்ட நிலா பொட்டு வச்சு
கார் முகில் கண்ணு வச்சு
கருங்குழல் கூந்தல் வச்சு
கிளி மூக்கு அடியே நீ சிரிக்கையில
நாந் தொலஞ்சு போறேனடி

மிடுக்கா நீ சிரிக்குற
பாத்தும் பாக்காம இருக்குற
அடியே கள்ளி தூர இருந்து உன்ன
ரசிச்சாலும் ஆச முகம்
பேரழகு தானடி

கன்னக் குழியில தினமும்
பொதஞ்சு போறேனே
உன் உதட்டு இடையில
தினமும் கசங்கிப் போறேனே..

நீ என்றால்
எனக்குப் பிடிக்கும்
நீ எனக்கு மட்டும் என்றால்
ரொம்பவே பிடிக்கும்

கை கோர்த்து
நடக்கப் பிடிக்கும்
அது உன் கைகோர்த்தென்றால்
ரொம்பவே பிடிக்கும்

முத்தம் பிடிக்கும்
உன் செவ்விதழ் என்
கன்னம் தழுவுமென்றால்
ரொம்பவே பிடிக்கும்

தோள் சாய்ந்து
அழப்பிடிக்கும்
என் தலை உன் தோள்
சாயுமென்றால் எனக்கு
ரொம்பவே பிடிக்கும்

கனவு காணப்பிடிக்கும்
கனவில் நீ
வருவாயென்றால்
ரொம்பவே பிடிக்கும்

தனிமை பிடிக்கும்
உன் நினைவுகளை
சக்கை போடுகையில்
தனிமை ரொம்பப் பிடிக்கும்
அமைதி பிடிக்கும்
உன் மௌன மொழி
பேசுகையில் அமைதி
ரொம்பவே பிடிக்கும்

கவிதை பிடிக்கும்
உனக்காய் கவிதை எழுத
ரொம்பவே பிடிக்கும்.

### *40. விழிச்சுக்க*

வாழ்வது ஒன்றும் கடினமல்ல
வாலிபம் ஒன்றும் வீணுக்கல்ல
சிறுபிள்ளை கோபங்களும்
சின்னச் சின்ன
விளையாட்டுக்களும்
விளையாடித் திரிய இது
நேரமுமல்ல
விழிச்சுக்க...

நம் இலக்கை நாமடைய
நமக்கொன்றும் அனுமதி
தேவையில்ல
வாய்ப்புகள் வரும் போகும்
அதை நம்பிப் பலனில்ல
நமக்கென ஒரு வாய்ப்பு
நம் கையில் மட்டும்
புரிஞ்சுக்க..

மற்றவன் வழி பின்பற்றி
அவன் முடிவை நாமடைவதை
விட
நமக்கான வழியை நாமுருவாக்கி
புதிய ஒரு முடிவை அடைவதிலே
தான்
அனுபவமுள்ள வெற்றியுண்டு
தெரிஞ்சுக்க..

இன்றைய செயலை
நாளை செய்ய நினையாதே
நாளைய செயலை இன்றே
செய்ய
வழிகளை கொஞ்சம் தேட
துணிஞ்சுக்க..

நினைத்தது முடிந்ததும்
இலக்கை நிறுத்திட எண்ணாதே
எண்ணும் எண்களுக்கு
முடிவில்லை கண்டாய்
நீ அடைய வேண்டியது இன்னும்
இருக்கிறது
நம்பிக்கை வச்சுக்க..

வானம் சூழ வேலியமைத்து
ஆல்ட்ரா வயலட் கதிருக்கு
தடை விதித்துக் காக்கும்
மேகங்களே..

எங்கேயோ இருந்து வந்து
தன்னிறத்தையே மாற்றி
எங்களுக்காய் மழை தரும்
மழை மேகங்களே..

அழகென நான் ரசிக்கும்
வெண்ணிலவை மூடி வைத்து
பாப்பா விளையாட்டுக்
காட்டும் திருட்டு
மேகங்களே..

உங்களுக்காய் ஒரு
கவி வரைகிறேன்
பேனாவில் தீர்ந்து போன
மையிற்காய் கொஞ்சம்
அந்த வானிடம் மை
வாங்கித்தாருங்கள்..

காகிதங்கள் தீர்ந்து போகையில்
உங்கள் மேனியை
கடன் கேற்பேன்
காத்திருங்கள்...

## 42. தோல்வி

எட்டிப் பிடிக்க முடியாமல்
தட்டுத் தடுமாறி வீழ்கிறேன்
தூக்க ஆளில்லை
நானே எழுந்துகொள்கிறேன்

மூக்கு முட்ட முயற்சி
முடிய முடிய முயற்சிக்கிறேன்
நானடைந்த வெற்றிகளில்
பாடம் படிக்காதவை
அத்தனையும் என்
தோல்விகள் தான்

திராட்சைக்கு பாடுபட்ட
நரியாரின் திராட்சை
புளிக்குமென்ற எண்ணம்
தன் தோல்வியில் படிக்காத பாடம்

வீழ்ந்தால் எழவேண்டும்
எழ முனைகையில்
வீழ வேண்டும்
எழுந்தது அன்று மட்டும்
மகிழ்வாகும்
வீழ்வது மட்டும் தான்
அழியா பாடமாகும்

தோல்வியிலும் தலை குனியா
தோல்வி வேண்டுமெனக்கு
வெற்றியிலும் பாடம் சொல்லும்
வெற்றி மட்டுமே வேண்டுமெனக்கு.

## 43. சூதாட்ட விளையாட்டு

திறமைக்கிங்கே மதிப்பில்லை
உழைப்பிற்கிங்கே பெறுமதியில்லை
முயற்சிக்கு இங்கே இடமில்லை
பாராட்டுக்கள் விழும்
அதில் உண்மை அதிகமில்லை

பணத்துக்கு மாறடிக்கும்
பதவிக்கு கூத்தாடும்
பட்டப்பகல் நாடகங்கள்
பக்குவமாய் மேடையேறும்
மைதானங்கள்

ஏலவே போன விலையில்
நேர்மைாய் தோற்க
முண்டியடிக்கும் கூட்டத்தை
முற்றும் மறந்து இரசிக்க
கோடிக்கணக்காய் மக்கள்
பாவமவர்கள் இன்னும்
பாமரர்கள்

வெற்றிக்காய் பணத்தை
பரிசாய் பெற்ற காலம்
மலையேறிப் போய்
தோற்கிறேன் பணம் தாவென
கெஞ்சிக் கூத்தாடும்
சூதாட்ட விளையாட்டில்
இன்னும் ஏனோ மயக்கம்

## 44. காவியக் கைகள்

கைகளால் கவி எழுத
தன் கரத்தையே ஏடாக்கி
காவியம் படைத்தவனின்
வரலாறிது

சுமை சுமக்கும் பிராணியை
கவனிக்க ஒருவன் இருப்பான்
வளர்க்க ஒருவன் இருப்பான்
ஆனாலிங்கே உழைப்பவனும்
வளர்ப்பவனும் அவனே தான்

நாறும் உடலானாலும்
சுகமான தூக்கம் இவனிடம்

மீதியில்லா வருமானமானாலும்
மனம் நிறையும் ஊண் இவனிடம்
இவனைப் பற்றி இவனே
தன் உதிரம் கொண்டு
வரைந்திட்ட காவியக் கவிதையில்

என் மை கொண்டு
நான்அவனுக்காய் வரையும் கவி
நிச்சயம் தோற்றுப் போகும்.

## 45. பள்ளிப் பருவம்

ஓடியாடி வெளையாடி
ஓயாமக் கத பேசி
கையக் கோத்துக்கிட்டே
ரொம்ப தூரம் நாம போனது
நெனச்சாலே இனிக்குது

ஒத்த ஐஸ் வாங்கி
ஓயாம நீ உறிஞ்ச
பாதிக் காசு என்னதுன்னு
அழுது புரண்டு
சண்ட போட்டோமே
நெனச்சாலே சிரிப்பு வருது

பள்ளிக் கூட வாத்தியாரு
கணக்கு தப்புன்னு ஒனக்கு
அடிக்க
என் நண்பி உன் கண்ணீர்
பாத்து நானழுக
வகுப்பே கேலி பண்ணும்
இப்ப நெனச்சாலும்
மனசு வலிக்குது

காதல் கத்தரிக்கா
சினிமால பாத்திருப்பம்
ஒட்டி உறவாடி
பழகினபோதும்
காலிஞ்சி கூட மனசுல
காதலிக்க தோனவேயில்ல

அத நெனச்சா பெரும தான்
வருது

பெரிய மனுசி ஆகிட்டன்னு
ஒளிஞ்சு ஒளிஞ்சு நீ பேச
ஒன்னப் பாக்கனும்னு
நான் துடிச்சு - நானே
தோத்துப் போனே

நீ கல்யாணங்கட்டி போன
பின்னும்
அழியாம பாசம் மட்டும்
மூட்டைல கெடக்குதடி

## 46. பாக்கெட் பேனை

சிறு பிள்ளையா இருக்கையிலே
பாக்கெட்டுல நீ போகலன்னு
அப்பாக்கிட்ட அடம்புடிச்சேன்
நெனவிருக்கா

நீ போகலன்னா என்ன
உன்னோட மூடியெடுத்து
பாக்கெட்டில் அப்பா
சொருகிவிட
சந்தோஷத்துல துள்ளினது
நெனவிருக்கா.

பாழாப்போன பரீட்சையில
கொஞ்சமிருந்த மைய வச்சு
எழுதாம நீ அடம்புடிச்சு
கடைசி நேரத்துல கை விட்டியே
நெனவிருக்கா

அழகா இருக்குதுன்னு
அடம்புடிச்சு நாங்கேக்க
புலம்பிப் புலம்பியே
அப்பா வாங்கித்தந்த
பத்து ரூவா பேன
பள்ளிக்கூட இடைவேளையில
பாதகன் எவனோ சுட்டான்னு
அழுதழுது அப்பாக்கிட்ட
ஏச்சுக் கேட்டனே நெனவிருக்கா

கவிதை கவிதைனு நானெழுத
செருப்பா நீயும் தேஞ்சழுக
உனக்குன்னும் நானெழுதின
கவிதை
நெனவிருக்கா

பேன் வந்த வேளையில
பாக்கெட் இருக்கலயே
பாக்கெட் இருக்கும் நேரத்துல
உன்ன சொருகிக்க தோனலயே

## 47. ஐஸ் பெட்டி

காய்ந்த சருகுகளாய்
காய்ந்து கிடக்கிறது
முகத்தின் சுருக்கங்கள்

பள்ளிக்கூட வயதில்
பள்ளியைத் தொலைத்து
பருவ வயதில்
சுதந்திரத்தைத் தொலைத்து
ஏக்கத்தோடு ஒருவன்

விற்றுத் தீர்த்துவிட
வேண்டுமென்று
ஆவல் இவனில்
தீராத ஐஸ் பழங்களின்
கரைதல் பெட்டியில்.

பழைய சைக்கிளும்
தேய்ந்த செருப்பும்
கழுகி நாளாகும்
காற்சட்டையும் இவன்
சொத்துக்கள்

மழை வெயிலில்
இவன் காய்கிறான்
வீட்டில் சில ஜீவன்கள்
பட்டினியில் காயக்கூடாது
என்பதற்காய்.

### 48. மனையாள்

பிறந்த வீட்டுப் படி தாண்டி
என் மன வீட்டில் குடிபுகுந்தாள்
மனையாள் பேர் பெற்று
என் அரசாள்கிறாள்

மித மிஞ்சிய செலவும்
மதி மிஞ்சிய சினமும்
கூடாதென்கிறாள்

குடி புகுந்தால்
மடி கிடத்தி எனை
முத்தமிட்டு நனைக்கிறாள்

என் தாய் அவள் தாயாய்
என் தந்தை அவள் தந்தையெனப்
பார்க்கிறாள்
பாச மழை பொழிந்தவர்
மனங்குளிர வைக்கிறாள்

சின்னச் சண்டை
செல்லக் குறும்புகள்
நடாத்தி முடிக்கிறாள்

இரசித்து முடிப்பதற்குள் எனை
அணைத்து நிற்கிறாள்
நாளை வருவாள்
நான் என வருவாள் அவள்
என் மனைவியாவாள்
என் மனை ஆள்வாள்.

பூமி முழுதாய்
விரிந்து கிடக்கிறது
வானம் பெரிதாய்
திறந்து கிடக்கிறது
பாராமலே மனிதா
உன் கண்கள் ஏன்
மூடிக் கிடக்கிறது??

வாழ்வதற்காய்
உழைக்கலாம்
வாழ்க்கையிலும்
உழைக்கலாம்
வாழ்க்கையே உன்
உழைப்பானால்
தேடலே முடிவானால்
உன் முடிவு எங்கேயோ??

கூவும் குயிலைப் பார்
தாவும் குரங்கைப் பார்
சிறகு விரிக்கும்
சிட்டைப் பார்
பஞ்சு வர்ணக்
கிளிகள் பார்
தேடலிருந்தும்
அதன் ஓய்வைப் பார்

உன்னால் இயலாத
காலமென்று ஒன்று வரும்
அன்று ஞாபகத்திற்கு
தீனி போட சில
நினைவுகளை சேர்த்து வை
அதுவாவது துணையாகும்
உன் தனிமைக்கு.

## 50. பெண் உழைப்பாளி

ஆத்தோரம் போறவளே
ஓ மாமன் எங்கடி
கல்யாணம் ஆனவளே
ஓ புருஷன் எங்கடி

கள்ளு குடிச்சு
கல்லீரல் கரைச்சவன
ஆசுவத்தி
சேத்துவிட்டாயோ
காச நோய் வந்தவன
நிம்மதியா தூங்க விட்டாயோ

சாப்பிட்டு நாளாச்சோ
அடுப்பெரிய மறுக்கலாச்சோ
உன் பாசக் கணவன் பாவமோ
பிள்ளையெல்லாம் அழுகையோ
தோள் கொடுக்க வந்தாயோ

நீ வலை விரிக்கையில
மீனெல்லாம் குடை விரிக்குமடி
நீ மடி விரிக்கையில
மீனுக்கெல்லாம் மயக்கம்
வந்து போகுமடி..

கை பட்ட மண்
கால் பட்ட நிலம்
கரைகண்ட கண்ணீர்
தாய் மண்ணே
போய் வருகிறேன்

மீண்டும் நீயழைத்தால்
திரும்பி வருகிறேன்
தோட்டாச்சத்தங்கள்
காதுகள் பிளக்கின்றன
உயிரை அவை
தொட முன்னம்
போய் வருகிறேன்
உயிரோடிருந்தால்
மீண்டும் வருகிறேன்

பயந்து பயந்து உன்னில்
பதுங்கிப் பதுங்கி
வாழ்ந்தது போதும்
என் தாயகமே
உயிரோடு விடுகிறார்கள்
விரட்டி விடுகிறார்கள்
போயாகவேண்டும்

யாரோ பிறந்த நிலத்தில்
யாருக்கோ உரிமையாம்
தாய் மண்ணே!!

உன்னைப் போலவே
என் உயிரையும்
நேசிக்கிறேன்!!

உயிர் மீதமிருக்கட்டும்
உன்னில் மீளுவேன்.
உடுத்திய உடை
கொஞ்சம் பொருள்
மீதமெல்லாம் உன்னில்,
தாயகமே, உயிரை கையிலும்
எண்ணத்தை உன்னிலும்
புதைத்துவிட்டுப்
போகிறேன்
முடிந்தால் வருவேன்.

## 52. என்ன காதலிது

பெரிய துண்டு கேக்கை அம்மா
அண்ணனுக்குக் கொடுக்க
அதை அவன் தன் தம்பிக்கு
நீட்டுவது காதல்

மழை காலத்து சேற்றில்
தங்கை வழுக்கி விடாமல் அவளை
தூக்கிக்கொண்டே வழுக்கி வழுக்கி
நடக்கும் அண்ணன்
தன் தங்கை மீது காதல்

கோபத்தில் அடித்துவிட்ட
மகனின் தலையைத்
தடாவித் தடாவியே
தூக்கம் தொலைக்கும்
அம்மா தன் பிள்ளை மேல் காதல்

பிள்ளை கேட்டதை
வாங்கிக் கொடுக்க முடியாமல்
பிள்ளையை நெஞ்சோடு
அணைத்து, உள்ளுக்குள்
அழும் அப்பாவின் காதல்

கேட்டதை வாங்கித்தர
அப்பாவால் முடியாதெனத் தெரிந்து
தன் ஆசைகளை மூட்டைகட்டும்
பிள்ளைளுக்கு அப்பா மேல் காதல்

தான் மாட்டிக்கொண்டாலும்
நண்பனை மாட்டிவிடாமல்
தண்டனை வாங்கும்
நண்பன் நெஞ்சில் காதல்

விரிக்கப்பட்ட குடைக்குள்
கசக்கப்படும் இதழ்கள்
இருட்டறைக்குள்
அனுமதியின்றிக்
கசங்கும் கற்புகள்
இதில் தனிமைக்கும்
இருளுக்கும் காதல்

இதுவெல்லாம் காதலெனும்
ஜாடை

## 53. பிரியாவிடை

நண்பனாய் நண்பியாய்
ஓடியாடித் திரிந்த பள்ளிக்கூட
மண்ணை
என் கையால் அள்ளி
காற்றில் பறக்க விட்டவனாய்
கையை விட்டு அகலா
சிறு மண்ணை முத்தமிட்டு
தட்டி விடுகிறேன்
கலங்கிக் கொண்டே அவை
என்னை விட்டும் நீங்கிச்
செல்கின்றன

பருவமறியா காலத்தில்
பவனி வந்த பொழுதுகள்
பரீட்சையை எண்ணி
பதறித் திரிந்த தருணங்கள்
இனி வரப் போவதில்லை

குட்டிக் குட்டி சண்டைகள்
மர நிழலில் வெட்டிப் பேச்சு
சிற்றுண்டிச் சாலை அலுவல்கள்
கழிவறைப் பயணம்
ஒவ்வொரு சிறு நிகழ்வும் என்
கண்ணீர்க் குளத்தில்
கல்லெறிந்துவிட்டுப் போகின்றன

பாடவேளைகளை விட
அதிகமாய் எங்கள்
இடைவேளைகளை நேசித்தவர்கள்
மைதானத்துப் புற்கள் என் கால் நீவி,
இனி இங்கெல்லாம்
வரமாட்டாயா என
அங்கலாய்த்துக் கொள்வதைப்
போலவே ஓர் உணர்வு

மர நிழலில் போட்டிருந்த
என் இருக்கையில்
இறந்த இலையொன்று
என் வருகைக்காய்
காத்திருப்பதாய்
தென்றல் வந்து சொல்லிவிட்டுச்
செல்கிறது

பாவமவை இனி என் வாழ்வில்
அந்த நாட்கள் மீண்டு
வரப்போவதில்லை எனும்
செய்தி அறியவில்லை

போய் வருகிறேன் தோழமைகளே
என்றாவது ஒரு நாள் மீண்டும்
இப்பாடசாலைக் காலம்
மீண்டு வராதா எனும்
ஆவலோடு போகிறேன்

என்னைப் போலவே உங்கள்
டயறிகளும் இன்றைய நாள்
முழுதும் கண்ணீரால்
நிரம்பியிருக்கும்
என்றாவது ஓர் நாள் சந்திக்கக்
கிடைத்தால் நம்
பாடசாலை சேட்டைகளை
ஞாபகமூட்ட மறந்துவிடாதீர்கள்

## 54. மனிதம் இன்னும் வாழ்கிறது

எனக்கென்னவென்று நடக்கும்
பல நூறு கால்களில்
வீழ்ந்து கிடக்கின்ற அவனை
தூக்கி நிறுத்த நடக்கும்
அவனுக்குள்

யாரென்றே தெரியாத போதும்
கால் தடுமாறும் அவனின்
கைகளைப் பிடிக்க நீளும்
அவனுக்குள்

யாருக்கு யாரோ அடிக்க
அடிப்பவனைப் பார்த்துத்
திட்டிக்கொண்டு நடக்கும்
அவனுக்குள்

அம்மா என்றழைக்கும் யாசகன்,
இது வரை காணாத முகம்
இருக்கும் சோற்றில்
கொஞ்சம் நீட்டும் அவளிடம்

கடித்து வலித்த இடத்தில்
முகம் துடைக்கும் ஓர் எறும்பு
பாவமென்று நசுக்காமல் தட்டிவிடும்
அவனிடம்
இன்னும் மனிதம்
கொஞ்சம் வாழ்கிறது

துப்பாக்கி ரவைகள்
மனிதத்தைத் துளைத்து
மனிதமுள்ள மனிதர்களைக்
குடிக்கிறது.

## 55. முதுமை

முதுகெலும்பில்லா
சிலரால் தான்
வயிற்றிலும்,
முதுகிலும் சுமந்த
பெற்றோரின் முதுமை

இன்னும்

முதிர்ந்து போன
முதியோர் இல்லத்தில்
முடங்கிக் கொண்டிருக்கிறது.

## 56. நான்

விட்டிலாய் பறந்து
விண்ணைத் தொட எம்பி
மண்ணைத் தொட்டழுது
விளையாட்டாய்த் திரிந்த
காலமெல்லாம்
மலையேறிப் போனது

கோடை வெயிலும்
மாரி மழையும்
என்னை நனைக்காமல்
போனதில்லை

என்னூர்க் குளத்தின்
மறுகரைகளில் என்
பாதம் பதியாமலிருந்ததில்லை
குளமோ ஆறோ என்
வீட்டில் ஏச்சுப்படாமல்- நான்
குளித்துக் கரையொதுங்கியதில்லை

என்ன ஆனாலென்ன
இப்போதைய நிமிடம் என்
சந்தோஷத்தைத் தொலைக்காமல்
காக்கக் கற்றுக்கொண்டேன்

முடிந்த செக்கனை
விட்டு மீண்டும்
தற்போதைய செக்கனுக்காய்
வாழப் பழகிக் கொண்டேன்.

## 57.பிரபலம்

பல நாட்களுக்கு முன்
பத்திரிகையில்
பிரசுரிக்க வேண்டி
அனுப்பி வைக்கப்பட்ட
கவிதைகள்

கவிஞன் பிரபலமான
பின்னர் அலுவலகத்தின்
குப்பைத் தொட்டியிலிருந்து
கிளறப்படுகின்றன;
பிரசுரத்திற்காய்

## 58. கவிக் குழந்தை

என் பேனா ஓர் கவிதையை
கருத்தரித்து
தமிழ் அமுதூட்டி
சொற் பலமூட்டி
வளர்த்து வந்தது

வெள்ளைத் தாளை விரித்து
பேனாவை நிலையாய்ப் பிடித்து
அசைத்து அசைத்து அதன்
கவிக் குழந்தையை
பிரசவிக்க வைத்துவிட்டேன்

சமுதாயக் கண்களெல்லாம்
என் கவிக் குழந்தையை
சூழ்ந்து நிற்கிறது

யாரைப் பாடியும்
யாரை வசை பாடியும்
கவிக் குழந்தை
பிறந்திருக்கும் என
அங்கலாய்ப்பு அவர்களுக்குள்

### 59.நீ வேண்டும்

கரைந்த நொடிகள்
ஒவ்வொன்றும்
உறைந்து போகக் கூடாதா

இந்த நிமிடமின்னும்
இப்படியே நீளாதா
உன் விரல் தீண்டி
என் கரம் நோகாதா

உன் தலை கொஞ்சம்
என் மடி சாயாதா

அன்பே
காதலிக்க நேரம் வேண்டும்
என் கனவு கலைகையில்
என்னருகே நீ வேண்டும்

## 60. வலி தாங்கி

வலி பொறுக்கத் துணிந்த
அவளால் தான் நீ கருவானாய்
வலி பொறுத்த அவளால் தான்
நீ பிறப்பைக் கண்டாய்
வலி சுமந்த அவளால் தான்
நீ அழும் போது
அரவணைக்கப்பட்டாய்

"தாய்"

அவள் வலி - நீ
சுமக்கப் போவதில்லை
வலி சுமந்த அவளை - மேலும்
வலி சுமக்க விடாமலாவது
பார்த்துக்கொள்ளலாமே.

ஏய் பெண்ணே..!!
எங்கே போகிறாய்?
ஒட்டியணிந்த ஆடையால்
உன் உடல் இரசிக்கப்படுகிறது
அதைக் கண்டும் காணாமல்
எங்கே போகிறாய்?

உன் கூந்தல்
காற்றோடு அலைந்தாடி
பேயாட்டம் ஆடுவதாய்
காட்சி கொடுக்கிறது
முந்தானைக்குள் கூந்தலை
மூடி வைக்க மறுத்து
எங்கே போகிறாய்?

துணைக்கு ஆளில்லாத போது
தனியே பயணமெதற்கு?
முகத்திரை அணிந்துகொண்டு
ஆடவனோடு பேச்செதற்கு?
கணவனில்லாத போது
உன் மச்சான் வீட்டிலெதற்கு?

என்ன செய்கிறாய் பெண்ணே?
பகலைக்கு அரிசி வாங்க
கடைத் தெரு வந்தாயோ
வாங்கி முடித்த உனக்கு
கடைத் தெருவில் என்ன
பேச்சு?

குழைந்து குழைந்து பேசுகிறாய்
கவனம் உன் மேல் இச்சையை
உண்டாக்கும் அது கவனம்

காதல் செய்யும் பெண்ணே!!
கவனம் கொள்..
காதல் தோல்விகள்
ஆண்களிலுமுண்டு
பெண்களிலுமுண்டு
கற்பழிக்கப்பட்டு
வெட்டிப் புதைக்கப்பட்டு
தற்கொலையில் முடிந்த கதைகள்
பெண்களில் அதிகமுண்டு
கவனம் கொள்.

## 62. பட்டது போதும்

அடிக்க அடிக்க குனிகிறாய்
அடிப்பான் என்றும் குனிகிறாய்
இது தொடர்ந்தால் உன்
நிமிர்தல் எப்போது?

மாற்றான் போட்ட விதி
உன் விதி அல்லவே
உன் மேல் உள்ளது
இறைவன் போட்ட
விதிமுறை மட்டுமே

உனக்காய் உன்னால்
மட்டுமே வாழ முடியும்
இதை உணர்ந்த நீயா
மாற்றான் கீழ் தலை
குனிந்து நிற்கிறாய்

பட்டது போதும் எழுந்திடு
விதி செய்ய நேரம் தூரமில்லை
உணர்ந்திடு
உன் வழி நீ அமைத்து
பயணிக்க மட்டும் முயன்றிடு

### 63.கவலை வேண்டாமே

நேற்று நடந்ததை எண்ணி
இன்று நீ அழுகிறாயா?
இன்று அழுதழுதே
தொலைத்த நாளை நினைத்து
நாளையையும்
தொலைக்கப் போகிறாயா?

உன்னால் முடியாதென
நீயே எண்ணிக்கொண்டதை
உலகின் எங்கே ஓர் மூலையில்
எவனோ ஒருவன்
செய்து கொண்டிருப்பான்
இல்லை இல்லை
செய்து முடித்திருப்பான்

உன்னால் முடியாததை
எவனோ ஒருவனால்
செய்ய முடிகிறதென்றால்
அவனால் முடியாத ஒன்றை
ஏன் உன்னால் இன்று
முயற்சிக்க முடியாது?

கவலையை விட்டுவிட்டு எழுந்திரு
உன் கைகளால் ஊன்று
அதுவே உன்
முதல் முயற்சியாகட்டும்

## 64. தட்டியது யாரோ!

நிலாவெளி முற்றத்தில்
என் சாய்வு நாற்காலியின் மடியில்
தலை சாய்த்துக் கொண்டேன்

முற்றத்தில் படர்ந்திருந்த
மல்லிகை தந்த வாசனை
மூக்கத் துளைக்கிறது

உண்டதையே மெல்லும்
பசுவாகி என் மனம்
பழைய ஞாபகங்களை
சக்கை போடத் தொடங்கிவிட்டது

யார் யாரோவெல்லாம்
வந்து போகிறார்கள்
அவர்கள் யாரென்று அறிமுகமில்லை
மனக்கதவை திறக்கச் சொல்லி
தட்டிப் பார்க்கிறார்கள்
பதிலில்லை.

இன்றைய இராப்பொழுதில்
மனக்கதவை திறந்து வைத்துக்
காத்திருக்கிறேன்

தட்டியவர்களும் தள்ளியவர்களும்
வெறும் நினைவாய் வந்து
போகிறார்கள்
கதவிற்குள் ஏனோ நுழைய
மறுக்கிறார்கள்.

## 65. மீண்டும் வேண்டும்

முத்தச் சத்தமில்லா
பூங்காக்கள் வேண்டும்
பூக்களை மட்டும் இரசிக்க
அங்கோர் இடம் வேண்டும்

விரிக்கப்பட குடைக்குள்
சலசலப்பில்லா
கடற் கரைகள் வேண்டும்
காற்றை வாங்கி மூச்சுவிட
அங்கோர் இடம் வேண்டும்

பேரூந்தின் பின்னிருக்கைகள்
காதல் ஜோடிகளின்றி இருக்க
வேண்டும்
இயற்கையை ரசிக்க
அங்கோர் இடம் வேண்டும்

மிருகக் காட்சி சாலைகளில்
மிருகங்கள் செய்யும்
சேட்டைகள் மட்டும் வேண்டும்
சேட்டை செய்யும்
அந்தக் காதல் ஜோடிகள் கொஞ்சம்
அதற்கு இடம் தர வேண்டும்

பாதையோர மனிதர் சிலரிடம்
வெட்கம் வேண்டும்
அவர் தம் ஆடைகள்
அரை குறை கழைந்து
முழுதாய் தன்னுடல்
மறைத்திட வேண்டும்

**தயக்கமேன்?**

கண்ணீரும் கம்மலையும்
கரஞ்சு போச்சு;
பயந்து நடந்த பாதையெல்லாம்
பழகிப் போச்சு;
கடுகடுத்த முகமெல்லாம்
புன்னகை பூத்துப் போச்சு;
இன்னுமென்னங்க...
தொடர்ந்து நடக்க தயக்கம்
ஏனுங்க..

**பிடித்திருக்கிறது உன்னால்**

உன் கண் பார்த்து
நான் விறைத்து
உன் இதழ் பார்த்து
நான் புதைந்து
வீழ்ந்து வீழ்ந்து
எழுந்து நிற்கிறேன்
மீண்டும் அந்தப்
பார்வை வேண்டும்
வீழ்வதும் எழுவதும்
பிடித்திருக்கிறது உன்னால்.

**கண்கள்**

இடி..
மின்னல்..
கண்கள் அதைக்
கொஞ்சம் மூடு

**அகவிருள்**

நல்லதாய்க் கேள்
நல்லதைத் தான் பேசு
நல்லதாய் நினை
நல்லதையே எண்ணு
அகவிருள் நீங்க
வழி பிறக்கும்

தலை நிமிந்து நட
தாழ்த்துவதைக் குறை
சிந்தித்து நட
சிரித்தே பேசு
அகவிருள் நீங்க
வழி பிறக்கும்

தோழமை அதிகரி
தோழ் கொடுக்கப் பழகு
தட்டிவிட்டால் மண்ணி
தட்டிக்கொடுக்கப் பழகு
அகவிருள் நீங்க
வழி பிறக்கும்

**காகிதக் கப்பல்**

என்னூரில் மழை
புறப்படத் தயாரானது
காகிதக் கப்பல்

**முற்றம்**

முற்றத்து மணலில்
சீமெந்துத் தரை
வீட்டுக்குள் இறப்பர் மரம்

## சூரியன்.

ஏழை வீட்டுக் கூரை
ஓலையின் இடைவெளியில்
மூக்கை நுழைக்கிறது சூரியன்.

## தோல்விகள்

தோல்விகளை விட்டு விட்டு
வெற்றிகளை மட்டும்
காதல் செய்யாதீர்கள்
தோல்விகள் தான்
வெற்றியை அனுபவிக்கும்
சந்தர்ப்பத்தையே தருகின்றன.

## என் குறுஞ்செய்தி

என் குறுஞ்செய்தி என்று
அவசர அவசரமாய்
அழித்து விடாதே..!
சில போது அது என்
மரணச் செய்தியாயும்
இருந்துவிடக்கூடும்.
உன் ஓர் சொட்டுக்
கண்ணீருக்காய்
உன்னைத் தேடி வந்திருக்கும்.

## கண்ணாமூச்சியாட்டம்

கை தழுவி நழுவும்
மழை நீரைக் கொஞ்சம்
என் கையில் பொத்தி
மழையிடமே
கண்ணாமூச்சியாட்டம்
ஆடிக்கொண்டிருந்தேன்
கோபத்தில் வீசி விடுகிறது
மின்னலை வானம்.

**முட்டாள்**

கிடைக்க இருந்தது
சில வேளைகளில்
கிடைக்காமலும் போகலாம்
அதற்காக

கிடைக்க இருப்பதை
அடைய முயற்சிக்காமல்
இருப்பது
முட்டாள்த் தனம்

**தாய்மை**

அம்மா என்றழைத்து
குழந்தைகள் அப்பாவை விட
அதிகமாய் அவளைச்
சுற்றிச் சுற்றி
வருவதெல்லாமே
பெண்ணியம் அவர்களுக்குக்
கிடைத்த வரத்தினால் தான்.

**கூலித் தொழிலாளி**

பயமின்றி முயற்சித்து
பணமின்றித் தடைப்பட்ட
என் பயணங்கள் போல
என் பிள்ளையின் பயணங்களும்
தடைப்பட்டு விடுமோ எனும்
பயம் மட்டுமே இப்போது என்னுள்

### என்னவள்

மன்னவளோ!!
மனையாளோ!!
அவள் எனதான பின்
நானென்றால் அவளாவாள்..
அவளென்றால் நானாவேன்..

### தென்றலே

தென்றலை இறுக்கி
அணைத்துக் கொண்டேன்
புயல் வந்து நீண்ட நேரமாய்
என்னோடு சண்டை செய்கிறது

### இலக்கணப்பிழை

ஆசையாய் எழுதப்பட்ட
மடலொன்று
இலக்கணப் பிழையென்று
கசக்கி வீசப்படுகிறது
வெறும் காகிதம் மட்டுமல்ல
அவன் காதலும் சேர்த்து.

### இனிய காலை

சூரியக் கதிர்களை
மென்றுகொண்டே அந்தப்
பறவைக் கூட்டம் பறக்க
மீதமிருந்த கொஞ்சம்
கதிர்களில் முகம்கழுவி
என் காலையை ப்புதுப்பிக்கிறேன்.

### என் நினைவுகள்

உன்னோடு நடந்த
என்னை விட்டுவிட்டு
உன்னுடன் நடக்கிறது
என் நினைவுகள்

**வெற்றிப் படி**

கொஞ்சம் பொறுங்கள்
இப்பொழுதுதான் என்
தோல்விப் படியை
மிதித்திருக்கிறேன்..

சீக்கிரமே வெற்றிப் படியை
தொட்டு விடுவேன்.
தோல்வியை வென்று தான்
வெற்றியை தோற்கடிக்க
வேண்டியிருக்கிறது.

**குழந்தை**

குழந்தை கீழே
தனிமையில் உறங்குகிறது
கட்டில்.

**செல்போன்**

வீதி விபத்து
செல்போன் காதில்
தொடர்பில் மனைவி

**முற்றுப்புள்ளி**

முற்றுப்புள்ளி தேடும்
என் கவிதைகள்
காணாத முற்றுப்புள்ளிக்காய்
ஆச்சரியத்தில்
முடிகின்றன!

**நீ என்னருகிலில்லை**

உன்னைத் தெரிந்த எனக்கு
காதலைத் தெரியவில்லை
காதலைத் தெரிந்துகொள்ள
இன்று நீ என்னருகிலில்லை

**அப்பாக்கள்**

அப்பாக்கள் எங்கள்
ஹீரோக்கள்
அவர்கள் பாத்திரமேற்று
நடிப்பவர்களல்லர்
பாத்திரங்களாகவே வாழ்ந்து
எங்களையும்
வாழவைப்பவர்கள்

**பொம்மைகள்.**

அடி பட்டாலும்
கடி பட்டாலும்
குழந்தைகளின் கைகளில்
தவழ்வதையே அதிகம்
விரும்புகின்றன

**அன்னையர் தினம்**

குழந்தையாகி
குழந்தை ஆக்கும்
தாய்மை நிறைந்த
பெண்ணியர் மட்டுமல்ல
பெண்ணாய்ப் பிறந்து
குழந்தைப் பேறின்றி
கண்ணீர் சுமக்கும்
அனைவருமே
அன்னையர்கள் தான்.

அன்னைக்கு ஓர் தினம்
தாயிடம் பாசமான
பிள்ளைகளுக்கு
தாய் மடியில் தூங்கும்
அத்தனை நாளுமே
அன்னையர் தினம் தான்

**வியர்வை**

உச்சி பிளக்கும் வெயில்
தற்கொலை செய்கின்றன
வியர்வைத் துளிகள்

**சின்ன மகள்**

தெருவில் ஐஸ் வண்டி
காலைச் சுற்றும்
சின்ன மகள்

**முத்திரை**

தலைவர் தலை
குத்து வாங்கியது
தபால் முத்திரையில்

**மரங்கொத்தி**

பட்ட மரத்தில்
மணியடிக்கிறது
மரங்கொத்தி

**குழந்தை மனம்**

தெருவில் மழை நீர்
கதவின் பூட்டைச் சுற்றும்
குழந்தை மனம்

**குயில் குஞ்சு**

மழைக்குள் காகம்
சிறகுக்குள்
குயில் குஞ்சு

**சிட்டுக்குருவி**

நாளை அறுவடை
செய்வதறியவில்லை
சிட்டுக்குருவி.

**ஆழம்**

நீயாக புரிந்துகொள்
இல்லை புதைந்து போவாய்
என் அன்பின் ஆழத்தில்.

**மது போத்தல்**

உண்ணக் கொடுத்தது
காலியான மது போத்தல்
ஏழைக்கு

**நிலாக்கள்**

உடைந்த கண்ணாடி
பல நூறு நிலாக்கள்
தரையில்

**நிலா முற்றம்**

நிலா முற்றம்
தனிமையில்
சாக்குக் கட்டில்

**சோற்றுமணி**

சிதறாத சோற்றுமணி
ஏமாற்றத்தோடு
சுவற்றில் காகம்

**முதிர்க்கன்னி**

தகப்பன் வெளிநாட்டில்
வீட்டில் முதிர்க்கன்னி
சீதன மாப்பிள்ளை.

**அலை**

கரை வரும் அலை
இழுத்துப்பிடிக்கும்
கடல்

**விதை**

பழமுண்ணும் சிட்டு
மீதமாய் சொண்டில்
விதை

**ரப்பர் பூ**

ரப்பர் பூ
பறந்து போகிறது
ஏமாறும் பூஞ்சிட்டு

**கூரை**

வானம் முழுக்க
நட்சத்திரம்
கூரை முழுதும் ஓட்டை

**தூவும் மழை**

தொடாத வானிலிருந்து
மேனி தொடுகிறது
தூவும் மழை.

**ஏழை வீடு**

தாழ்ப்பாளில்லா ஏழை வீடு
கம்மல் பத்திரமாய்
அடகுக் கடையில்

### ஒரே குடை

கொஞ்சம் மழை பொழியட்டும்
அப்போதாவது நானும்
அவளும் ஒரே குடைக்குள்
கொஞ்சமாவது நெருங்கி
சிறிது தூரம் நடக்கலாம்.

### அந்தப் பார்வை

ஏதும் வேண்டாம் அந்தப்
பார்வை மட்டும் போதும்
வீழ்ந்து எழுவதென்றாலும்
வாழ்ந்து மடிவதென்றாலும்

### நாமறியாத ஒருவர்

பார்ப்பதற்கு கொஞ்சம்
கடுகடுத்த முகம்
கெட்டவரென்று
முடிவெடுத்தாகியது
மாடிப்படிகளில்
கால்தவறி விழும்போது
கைத்தங்கலாக அவரின் கை
நம் கையைத் தொடும் வரை.

### உடைந்த கோப்பை

பிள்ளையின் கை பட்டு
தவறி வீழ்ந்ததில்
உடைந்த கோப்பை;
கடைக்காரன் மேல்
அம்மாவுக்கு கோபம்

### "இருள்"

அதற்குள் தான்
இன்னமும் என்
நினைவுகள்
உயிர் வாழ்கின்றன

**கண்ணம்**

தாயின் கண்ணங்கள்
பசுமை நிறைந்த நிலங்கள்
பிள்ளையின் எச்சில் மழை
அந்நிலங்களை மூழ்கடிக்கத்
தவறுவதில்லை.

**கற்பனை மரம்**

என் மனதில் இடமெடுத்து
சிந்தனையில் உரமெடுத்து
சிதறிய சொல்லை
பொறுக்கியெடுத்து
நீண்டு வளர்ந்து செல்கிறது
என்
கற்பனை மரம்

**வெற்றி**

ஆயிரம் தோல்விகள்
வந்து போவது அவ்வளவாய்
வலிப்பதில்லை
பெருமை பிடித்த சிலர்
தோல்வி என்று பார்க்கும்
ஏளனப் பார்வை தான்
இன்றே வென்றிருக்கலாமே
என எண்ண வைக்கிறது.

**முதியவர்கள்**

குழந்தைகளை அதிகமாய்
குழந்தைகளே
புரிந்துகொள்கிறார்கள்
அதனால் என்னவோ
முதியவர்களுக்கு
குழந்தைகளில் அப்படியொரு
பிரியம்.

**நிலமே**

கோழைகள்
புதைக்கப்படுகிறார்கள்
வீரர்கள் விதைக்கப்படுகிறார்கள்
நிலமே எல்லாமே
உன்னில்.

**போர்**

சப்தமாய் நடந்த
போர் முடிந்து போனது
சப்தமில்லாமல் தொடரும்
நெஞ்சில் ஈரமில்லா போர்
முற்றுப்புள்ளியைத் தேடி..

**முத்தம்**

சத்தமாய் ஒரு
முத்தம் செய்
மௌனமாய் ஒரு
யுத்தம் தொடங்கலாம்.

**பருவமடையாக் காதல்**

பருவம் தொட்டுவிடாத
வயதின்
பள்ளிக்கூட நினைவுகளை
சக்கை போட்டு மீண்டும்
மீண்டும்
மென்றுகொண்டிருக்கிறேன்

பருவமடையாக் காதல் ஒன்று
என்னைச் சுற்றி வந்ததாய்
பருவத்து அனுபவம் மெல்ல
சொல்லிவிட்டுச் செல்கிறது.

**நீ வீசியெறிந்த வார்த்தைகள்**

நீ வீசியெறிந்த வார்த்தைகளை
ஒன்று விடாமல்
பொறுக்கிக்கொண்டேன்
ஆத்திரத்தில் நீ வீசிய
வார்த்தைகள் இவை

ஆத்திரம் தணிந்த பின்
வார்த்தைகளை
பொறுக்கிக்கொள்ள
என்னிடமே நீ வர வேண்டும்

**வேசமில்லா பாசம்**

பாசத்தை வேசமில்லால்
வைக்கத் தெரிந்த
உறவுகளுக்கு..
அப்பாசம்
யார் யார் மீது வைக்க
வேண்டுமெனும்
வரையறை இருப்பதில்லை

**பிரம்பு**

உங்கள் பிரம்புகளை விட
உங்கள் சொற்கள்
ஆபத்தானவை
காயம் வரும் வரை
தண்டித்தாலும்

வடுவாகும் வரை
திட்டித் தீர்த்து விடாதீர்கள்

**தந்தை முத்தம்**

தன் வாழ்வில் பலர்
அதிகமாய் ஏங்கியதும்
குறைவாய்க் கிடைத்ததும்
தந்தையின் அணைப்பும்
அவரது மீசை குத்தும்
முத்தமும் தான்.

**தோல்விகள்**

தோல்விகளை விட்டு விட்டு
வெற்றிகளை மட்டும்
காதல் செய்யாதீர்கள்
தோல்விகள் தான்
வெற்றியை அனுபவிக்கும்
சந்தர்ப்பத்தையே தருகின்றன.

**ஏழை முகங்கள்**

பியுட்டி பாலர்களை நம்பி அல்ல
மளிகைக் கடையில் கிடைக்கும்
சில ரூபாய் பெறுமதியான
மணப் பவுடர்களையும்
பொன் நகைகளை விட
புன்னகைகளை மட்டுமே
சுமந்துகொண்டு பல
ஏழைச் சிறுமிகளின் முகங்கள்
நம் முன் சுற்றி வருகின்றன.

**மகளே!**

என் கண்ணைக் கட்டி விட்டு
நீ ஒளிந்துகொள்கிறாய்
மகளே! நீயிருக்கும் இடம்
நான் கண்டுகொண்ட பின்னும்
நீயில்லா மறு பக்கம்
சுற்றி வருகிறேன்,

## *67. என் கலைப்பயணத்தின் பங்காளர்கள்*

### இணையத்தளங்கள்

த புத்தளம் டைம்ஸ்

கல்பிட்டியின் குரல்

புத்தளம் ஒன்லைன்

காத்தான்குடி இன்போ

தடாகம் கலை இலக்கிய வட்டம்

### சஞ்சிகைகள்

அருவி காலாண்டிதழ்

விழி மாத இதழ்

மனித நேய இதழ்

மைத்துளிகள் கவிதை நூல்

### வானொலி

தமிழ் எச்.டி - கனடா

## 68. முகநூல் நட்போடு...

"கடல் தேடும் நதி" நதிகள் வறண்டு கடலே விக்கிக் கொண்டிருக்கும் கலியுகத்தில் நம் கவிதை தாகம் தீர ஊற்றெடுக்கும் வரிகளோடு வருகிறது தம்பி நுஸ்ரி அவர்களின் கவிதை நூல், கவிஞனின் முதல் படைப்பு ஓர் தலச்சம் பிரசவம்,, ஆழ்மனம் சுமந்த பாரம்,,காயம்,,வலிகள்,,காதல்,,ஆதங்கம்,,ஆனந்தம் என அத்தனையும் எழுத்தாய் அச்சாகும் அற்புத தருணமது,, அவ்வகையில் எழுத்துலகில் கால் பதிக்கும் புதுக் கவிஞருக்கு வாழ்த்துக்கள்,,

மண்மணம் மாறாத கிராமியக் கவிதைகள் மனதை கிரங்கடிக்க,, சமூக அவலத்தை சுட்டும் சாட்டை அடி கவிதைகள் அம்பெனப் பாய்கின்றன கவிதைகளில்! காதலில் குழையும் வரிகள் மயக்கம் தர,, இயற்கையை போற்றும் வரிகள் இனிமை ஊட்டுகின்றன,, ஒவ்வொரு கவிதையும் தனி ஒரு அனுபவம்,, சிறப்பான சொல்லாடலும்,,சிலிர்ப்பூட்டும் உவமைகளும் மெருகேற்றி இருக்கின்றன,, கவிதை பக்கங்களை புடம்போட்ட பொக்கிசமாய்! யதார்த்த உணர்வலையோடும்,, சிந்தனை பொதிந்த முத்துக்களாய் கவிதைகளை அள்ளிவந்து,, கடல்தொடும் இந்த நதி,,
வாசகர் மனங்களை அழகிய கவிதைகளால் கொள்ளை அடித்து தம்பிக்கு தனி ஒரு அடையாளம் தரும் அற்புத படைப்பாய் வெற்றி பெறட்டும்,,

வாழ்த்துக்களுடன்
**புதுமை தமிழினி**
**மதுரை, இந்தியா.**

இளைஞனொருவனின் இலட்சிய வேட்கையை தீர்த்திடுவோம்..
அன்பனின் அகல கால்களுடன் இணைந்திடுவோம்..
தோழனின் முயற்சிக்கு தோள்கொடுத்திடுவோம்..
வாசித்திடுவோம் வாருங்கள், வாங்கிடுவோம் வாருங்கள்
கடல் தேடும் நதியிற்கு வழித்திறந்திடுவோம் வாருங்கள்..

**வஸீம் அகரம்**
**புத்தளம் - இலங்கை**

பொய்யும் மெய்யும்,, கலந்ததே கவிமொழி,, அதை கருத்தோடும்.. இனிப்போடும் எடுத்துரைப்பதே கவஞர்களின் சிறப்பு!!
கவியின் சிறப்போடு,, தமிழும் தலைதோங்கி,, தவளட்டும் நூலாக,, தாய்மண்ணில் எங்கினும்!!
சகோதரரே உங்கள் வலுவான முயற்சிக்கு என் மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்

***ஈழமகள் திவ்யா***
***மாத்தளை, இலங்கை.***

சொற்ப காலத்துக்குள்ளேயே துடி துடிப்பும் மெய் சிலிர்ப்புமான குறுங் கவிதைகள் மூலம் முக நூலில் பிரபலமான இளம் கவிஞன் நுஸ்ரி இப்னு ரஹ்மதுல்லாஹவைப் பற்றி சில வார்த்தைகள் என்னால் சொல்லாமல் இருக்க முடியவில்லை. யதார்த்தமான, காலத்தின் நிகழ் தகவல்களை மையப்படுத்தி வெளியாகும் அவரது ஆக்கங்கள் எளிமையான வார்த்தைகள் கொண்டு மனதைத் தொடுகின்றன. தேசிய மட்டத்தில் பரிசுகள் வென்றெடுத்த வகையில் அவருக்கான அங்கீகாரம் சொற்ப காலத்துக்குள்ளேயே கிடைத்து விட்டது பெருமைக்குரியதாகும்...

"கடல் தேடும் நதி" என்னும் நுஸ்ரி ரஹ்மதுல்லாஹ்வின் கவிதைத் தொகுப்பானது நிச்சயம் அதை வாசிப்போரின் இதயங்களையும் தொட்டு உணர்ச்சி அலைகளால் அடித்துச் செல்லும் என்பதில் சந்தேகமில்லை. இன்னும் இன்னும் நிறைய படைப்புகளை உருவாக்கி இலக்கிய உலகில் வெற்றிகரமாக பலமாக கால் தடம் பதித்திட வேண்டுகிறேன். முயற்சிக்கு வாழ்த்துக்கள்...

***இப்ராஹிம் நிஹ்ரிர்*** (பயிற்சி பெற்ற ஆங்கில ஆசிரியர்)
***புத்தளம், இலங்கை***

பால பகலவனாய்; அன்டைக்குத்தான் உதித்தாய்
காத்திருக்க வையாமலே; பார்த்திருக்க வளர்ந்தாய்
மடை திறந்த இலக்கியத்தை; படைப்புகளில் பாய்ச்சினாய்
பரினாம வளர்ச்சிக்காணும்; படைப்பாளனே!
உன்னுதிரத்தில் ஓடும்; ஊக்க சக்தி
இளைஞர்களுக்கு எடுத்துக்காட்டாகட்டும்

**சகோதரி. நதீஹா அப்பாஸ்(சட்டத்தரணி)**
**புத்தளம், இலங்கை.**

நதியொன்று கடல் தேடுது....
கவியொன்று மடல் போடுது....
நூலாகி வரும் நாளில்
பின்நோக்கி நகராமல்
முன்னோக்கி முகம் மலர்ந்து
வாங்கிடுவீர் நல்லோரே!

**ஆசிரியர். கலாபூஷனம். ரபீக்**
**புத்தளம் - இலங்கை**

பழகிய ஆரம்ப நாற்களில்.., இவ்வளவு திறமை மிதந்திருக்கும் என்று எண்ணவே இல்லை..அம்புட்டு திறமை, விடாமுயற்ச்சி, பொறுமை, சகித்துக் கொள்ளல் என பல வகைகள் குடி கொண்டவராகிட்டீர்கள்...,!, இனி என்ன எங்கேயோ போக போறீங்க....(இன்ஷா அல்லாஹ் ) வாழ்த்துக்கள்

**முஹம்மத் ஸம் அல் ப்ஸி**
**நிந்தவூர், இலங்கை**

## நூலாசிரியரைப் பற்றி...

புத்தளம், இலங்கையின் மேற்குக் கரையை அண்டியுள்ள ஒரு நகரம் ஆகும், தலை நகர் கொழும்பிலிருந்து வடக்கு நோக்கி 130 கி.மீ (81 மைல்) தூரத்தில் கடல் நீரேரியைத் தொட்டவாறு காட்சி தரும் நகரம் புத்தளம்.

இங்கு தான் ரஹ்மதுல்லாஹ், ஜரீனா உம்மா தம்பதிகளுக்கு 1991 ஆம் ஆண்டு மகனாகப் பிறந்தார் நுஸ்ரி ரஹ்மதுல்லாஹ். இவரின் தாய் தந்தையர்கள் மன்னார் சிலாவத்துறையில் பண்டாரவெளி எனும் கிராமத்தை பூர்வீகமாக கொண்டவர்கள்: இவர் வளர்ந்து வரும் இளம் கவிஞராவார்.

தான் கற்கும் காலத்திலிருந்தே கவிதை, கட்டுரை, சிறுகதை, குறுநாடகம் என இலக்கியத்தின் பல்வேறு துறைகளிலும் ஆர்வம் காட்டி வரும் இவர் ஈழத்து தேசிய இதழ்களிலும், சஞ்சிகைகளிலும், வானொலி நிகழ்சசிகளிலும் இணையத்தளங்களிலும், முகநூலிலும் ஆக்கங்களைப் படைத்து வருகின்றார். அண்மையில் இலங்கை தடாகம் கலை இலக்கிய கல்வி கலாசார பன்னாட்டு அமைப்பு நடாத்திய கவிதைப் போட்டியில் வெற்றி பெற்று கவித்தீபம் பட்டத்தையும், சான்றிதளையும் பெற்றுக் கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

கடல் தேடும் நதி கவிதைத் தொகுதி மூலம் தன்னை ஒரு கவிஞராக அடையாளம் காட்டிக்கொண்டிருக்கும் நுஸ்ரி ரஹ்மதுல்லாஹ் மேலும் பல நல்ல படைப்புக்களை தமிழன்னையின் மடியில் தவழ விட வேண்டும் என இதயத்தால் நிறைவோடு வாழ்த்தி ஆசீர்வதிக்கிறேன்.

கவிதாயினி லூசியா கூஞ்ஞே
ஜேர்மன் நிரிவாக ஆசிரியர்.
தடாகம் கலை இலக்கய கல்வி
கலாசார பன்னாட்டு அமைப்பு,
இலங்கை.



ISBN 978-955-42674-0-4